# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 கார்த்திகை 7 செவ்வாய்க்கிழமை (23-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:310


## இறந்தோரில் 34 பேரின் சடலங்களை உறவினர்கள் அடையாளம் காட்டினர்

### இரட்டைப் பிள்ளைகள் உட்பட ஒரே குடும்பத்தில் நால்வர் பலி

வவுனியா, நவ. 23

மடுத்தேவாலயப் பகுதியில் சனி இரவு இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் இதுவரை 34 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவஇடத்தில் உயிரிழந்த 31 பேரில் 27 பேரின் சடலங்களும் வவுனியா வைத்தியசாலையில் உயிரிழந்த 7 பேரின் சடலங்களுமே அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவஇடத்தில் உயிரிழந்து அடையாளம் காணப்பட்ட 27 பேரின் விவரம்:-

★ நிக்கலஸ் யூட்யூலியஸ் (வயது-23)

★ முனியாண்டி செல்வம் (வயது-55)

★ ஜி. தர்மலிங்கம் (வயது-53)

★ முத்தையா சிவானந்தம் வயது-28)

★ கே. ஜெயசீலன் (வயது-21)

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படை வாபஸுக்கு ஜனாதிபதி உத்தரவு!

கொழும்பு, நவம்பர் 23

மடுத்தேவாலயப் பகுதியில் இருந்து இராணுவத்தினரை அகற்றுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளுக்கு நேற்று உத்தரவிட்டார்.

மடுப்பகுதியில் தஞ்சம் கோரி உள்ள பொதுமக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக இராணுவத்தினர் அந்தப் பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் எனத் தாம் பணித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பணிப்புரையை சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுக்கு தாம் விடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (இ-3 7)

# வீணான உயிரிழப்புகளை தவிர்க்க புலிகளுடன் பேச்சை ஆரம்பியுங்கள்

## கூட்டணித் தூதுக்குழு நேற்று ஜனாதிபதியை சந்தித்து கோரிக்கை

கொழும்பு, நவம்பர் 23

**"அர்த்தமற்ற போரால் பொதுமக்கள் வீணாக உயிரிழக்கும் நிலை தொடர்வதால் உடனடியாக 3 ஆம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பியுங்கள்"**

**ஜனாதிபதியை நேற்றுச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.**

அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதியை தமிழர் விடுதலைக் கூட்டணி தூதுக்குழு, நேற்றுச் சந்தித்தது.

கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, பொ. செல்வராசா, யாழ். மாநகரசபை பிரதி மேயர் ரவிராஜ் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

கூட்டணியினர் முன் வைத்த கோரிக்கைகள் வரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மரியன்னை ஆலயத்தில் உண்ணாவிரதப் போராட்டம்

### அடுத்த ஞாயிறன்று நடத்த முடிவு

யாழ்ப்பாணம், நவ. 23

மடுத் தேவாலயத் தாக்குதல்களைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் மரியன்னை ஆலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நேற்று மாலை கூடிய யாழ். மறை மாவட்ட குருமார் இது தொடர்பான முடிவை எடுத்துள்ளனர்.

மடுத் தேவாலயச் சம்பவத்தைக் கடுமையாகக் கண்டித்துள்ள மறை மாவட்டத்தினர் அன்று ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தையும் திருப்பலியையும் மேற்கொள்வது என்று முடிவு செய்தனர். (இ-3-5)

## அருகருகே தோண்டப்பட்ட குழிகளில் 26 சடலங்கள் நேற்று அடக்கம்

மன்னார், நவ. 23

மடுத்தேவாலயத் தாக்குதலில் உயிரிழந்த 26 பேரின் சடலங்கள் அருகருகே நேற்று மாலை மடுவில் அடக்கம் செய்யப்பட்டன.

மடுவில் இருந்து மன்னார் ஆயர் அதிவண ராயப்பு யோசெப்பினால் மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த 31 சடலங்களும் மன்னார் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை இடம்பெற்றது.

மன்னார் நீதிவான் எம் இளஞ்செழியன் மரண விசாரணை நடத்திய பின்னர் நேற்றுக் காலை மீண்டும் அவை ஆயரால் மடுவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நான்கு சகோதரர்களின் சடலங்கள் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டன. மற்றொரு சடலம் கட்டைக்காட்டுக்கு உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

எஞ்சிய 26 சடலங்களும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுச் சம்பவத்துக்குப் புலிகள் படையினர் மீது குற்றச்சாட்டு

லண்டன், நவ. 23

மடுத் தேவாலயத்தில் கடந்த சனி இரவு தாக்குதல் நடத்தியது இலங்கை இராணுவமே என்று விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

லண்டன் செயலகத்தில் இருந்து விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் இந்தக் குற்றச் சாட்டைத் தெரிவித்துள்ளனர் என்று 'ரோய்ட்டர்' தெரிவித்தது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மடு தேவாலயத்தில் தமிழ் அகதிகள் படுகொலை செய்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்கந்தபுரத்தில் பேரணி நடத்த முடிவு

வவுனியா, நவ. 23

மடுத் தேவாலயத் தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இன்று மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்தப் பேரணி முடிவில் ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு மகஜர் ஒன்று அனுப்பப்படவிருக்கின்றது. (இ-3)

## புலிகளே தாக்கியதாக படைத் தரப்புக் கூறுகிறது

கொழும்பு, நவ 23

மடுத் தேவாலயப் பகுதி மீது கடந்த சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் புலிகளே காரணம் என்று பலாலி இராணுவத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியின் மேற்குப் பகுதியில் படையினர் ஆரம்பித்து உள்ள நடவடிக்கையின்போது மடுத்தேவாலயம்உட்படமடுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிக்க போதியமருந்து இல்லை

### சித்தார்த்தன் ஜனாதிபதிக்கு முறையீடு

மடுத்தேவாலயத் தாக்குதலில் காயமடைந்து வவுனியா அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்குச் சிகிச்சை அளிக்க போதிய மருந்து வகைகள் இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது விடயமாக புளொட் அமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் ஜனாதிபதிக்கு அவசர 'பக்ஸ்' செய்தி ஒன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

உடனடியாக ஊசி மருந்து வகைகளை அனுப்புமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் புளொட் அமைப்பினர் அங்கு சிகிச்சை பெறுபவர்களுக்காக நேற்று ஒருதொகுதி மருந்து வகைகளை வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர், இரத்தம் வழங்கல், நோயாளர்களைப் பராமரித்தல் போன்ற பணிகளில் புளொட் அமைப்பு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தமிழர் கலாசாரத்துக்கு பகிடிவதை எதிரானது

### சென்னை நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, நவ. 23

பகிடிவதை தமிழர் கலாசாரத்துக்கு எதிரானது எனச் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கோயம்புத்தூர் கலைக் கல்லூரியின் புதிய மாணவர்கள் நால்வர் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் நால்வரால் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டது தொடர்பான வழக்கு ஒன்றின் விசாரணை முடிவிலேயே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

பகிடிவதை நடத்தியதுக்காக கல்லூரி அதிபரினால் கல்லூரியில் இருந்து நீக்கப்பட்ட இந்த நான்கு மாணவர்கள் சார்பாகவும் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக இடதுசாரி சக்தியாலேயே கோர யுத்தத்தை முடிக்க இயலும்

## வாசுதேவ சொல்கிறார்

கொழும்பு, நவ. 23

ஒரு மாற்று ஜனநாயக இடதுசாரி சக்தியொன்றினால் மட்டுமே நாட்டில் நடைபெறும் கோர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றைக்காண முடியும்

இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார காலியில் நடைபெற்ற ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மாவட்ட பேராளர் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியதாவது—

தமிழ் பேசும் மக்கள்ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றைப் பேச்சுவார்த்தைகள் மூலம் உருவாக்கி பொருளாதார ரீதியாகவும் சமூக கலாசார ரீதியாகவும் நாட்டை முன்னேற்ற முடியும்.

பதினேழு வருடகால ஐ. தே. க. ஆட்சியும், 5 வருடகால சந்திரிகாவின் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியும், இந்த நாட்டில் வாழும் சாமான்யர்களினதும் உழைக்கும் மக்களினதும், ஒட்டுமொத்தமான தேசிய நலன்கள் அனைத்திற்கும் எதிராக ஆட்சி நடத்தியதனால் இந்த நாடும் நாட்டு மக்களும் சீரழிந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏகாதிபத்திய நலன்களைக் கட்டிக்காத்து வளர்த்துவரும் நாடுகளின் செல்வங்களைச் சூறையாடும் உலக வங்கி, சர்வதேச நாணயசபை, சர்வதேச வாணிப ஸ்தாபனம் போன்றவற்றின் கோரிக்கைகளுக்குதலைவணங்கும்ரணில் சந்திரிகா தலைமைகளால் நாட்டிற்கு சுபீட்சத்தையும் சமாதானத்தையும் கொண்டு வர முடியாதது மட்டுமல்ல இந்த இரண்டு தலைமைகளுமே தமதுஆட்சியை நீடிக்க மிகமோசமான அடக்குமுறை, எதேச்சாதிகார நிர்வாகமொன்றை ஜனநாயகத்தின் பொதுவான நலன்களுக்கு எதிராக நடத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் நாட்டு மக்கள் அனைவரையுமே அச்சுறுத்துகின்றன.

இப்படி அவர் மேலும் கூறினார். [ஐ-5]

# கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி விரைவில் பழைய இடத்தில்

வலி. வடக்கு, நவ. 23

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி 5 லட்சம் ரூபா செலவில் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள இக் கட்டடம்இந்திய இராணுவம் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் ஏற்பட்ட வன் செயல்களில் சேதமடைந்தது.

இதனைத் தொடர்ந்து

(9 ஆம் பக்கம் பார்க்க)


**ராஜா**
யாழ்ப்பாணம்
விஜய் - சுவாதி
மற்றும பலர் நடித்த
**செல்வா**
10-30, 2-30
நாளை முதல்
செங்கோட்டை
(சி/9911)



**ஸ்ரீசெல்வா சினிமா**
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தினசரி 10-30 2-30
(பழைய நேரம்)
விஜயகாந் - சிம்ரான்
ஆனந்தராஜ்
நடித்த
**கண்ணுபட போகுதய்யா**
(சிறந்த குடும்பச்சித்திரம்)
(புதிய வெளியீடு)
(71194)


## கண்ணீர் அஞ்சலி

20--11--99 இல் மடுமாதா தேவாலயத்தில் அகால மரணமடைந்த

எமது சக ஆசிரிய மாணவன்

வா. பாலச்சந்திரனின் தந்தையார்

**க. வாரித்தம்பி** தங்கை **வா. பவானி**

மற்றும் உறவினர்கள் ஆகியோரின் மறைவினால் சொல்லொணாத் துன்பமடைகின்றோம். இதனால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வணிக மாணவ மன்றம்.

பலாலி ஆசிரியர் கலாசாலை,
திருநெல்வேலி.

(71188)

## 9-வது ஆண்டுநினைவுமீட்டல்



தோற்றம் 06 — 10 — 1924

மறைவு 23 — 11 — 1990

அமரர்

**சண்முகம் ஞானப்பிரகாசம்**

(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகரும் இணைப்பதிகாரியும்)

சமூக அபிவிருத்திக்காகத் தன்னையே அர்ப்பணித்து மக்களோடு மக்களாக நின்று அயராது உழைத்து பலரின் முன்னேற்றம் கண்ட மகானை நினைவு கூருகின்றோம்.

நிர்வாகச் செயலாளர்,
சமூக அபிவிருத்தி மன்றம்.

257/2, 1ஆவது மாடி,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(71151)


**லிபேட்டி** அச்சுவேலி.
அர்ஜுன்
நடித்த
**முதல்வன்**
காட்சிகள் 10-30, 2-30
T.P.No.070-212223
070 - 212678
(71169)



**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய் — சாளினி
**காதலுக்கு மரியாதை**
காட்சிகள்:
11-00, 2-30.
(புதிய நேரம்)
வெகு விரைவில்
உழைப்பாளி
(71105)


## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி சிவானந்தன்

உடுப்பிட்டியைச் சேர்ந்த குமாரசாமி சிவானந்தன் 21-11-99 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசாமி — கனகாம்பிகை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற புவிராஜரட்ணம்-சரஸ்வதி [கொழும்பு], தம்பதிகளின் மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் யோகச்செல்வம் [உயர்தரம், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி], செல்வக்குமார் [உயர்தரம், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி], ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், ஆலாலசுந்தரம், திசைவீரசிங்கம் மற்றும் சௌபாக்கிய லட்சுமி [மட்டக்களப்பு], தேவமனோகரி [கொழும்பு], நடராசா [பண்டத்தரிப்பு] ஆகியோரின் சகோதரரும் திருஞானசம்பந்தன் [கூட்டுறவுப் பதிப்பகம் யா/ பல நோ. கூ. சங்கம்], விவேகானந்தன் (இலங்கை வங்கி, மானிப்பாய்.) கதிர்காமநாதன் [அச்சுவேலி], யோகானந்தன் [சவூதி அரேபியா], சுகுமார் [கொழும்பு], பரமேஸ்வரி [சுவிஸ்], நந்தகுமார் (பொறியியலாளர் அமெரிக்கா], மோகன்ராஜ் [பொறியியலாளர் நியூசிலாந்து) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி யோகேஸ்வரி
(மனைவி)

'பொன்னா வில்லா'
இமையாணன்,
உடுப்பிட்டி.

(71191)

### திருமதி சுகுமாரன் மகேஸ்வரி

பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகுமாரன் மகேஸ்வரி கனடாவில் காலமானார்.

அன்னார் சுகுமாரனின் (கனடா) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகரட்னம் — செல்லம்மா தம்பதிகளின் மகளும், சுபீதகுமார் (கனடா), ரவீந்திரகுமார் (கனடா), சுரேஸ்குமார் (சுவிஸ்) சுரேந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகராஜினி (கனடா), லதா (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஷன் (கனடா) அருண் (சுவிஸ்), அனுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவானந்தன்
(சகோதரன்)

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

(71185)


உ

**மங்களகரமான திறப்பு விழா**

அன்புடையீர்!

யாழ். நகரில் பாடசாலை உபகரண அச்சக காகிதாதிகள் வியாபாரத்தில் பலவருடகால முன்னோடி நிறுவனமான

**சிங்கம் இன்டஸ்றீஸ்** இன்
(290, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)
சகோதர நிறுவனமான

**பேப்பர்ஹவுஸ்**
**PAPER HOUSE**
இல. 300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் வியாபார நிறுவனத்தை

நிகழும் பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 08 ஆம் நாள் (24-11-1999) புதன்கிழமை முற்பகல் 7-56 — 9-52 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இறையருள் துணை கொண்டு ஆரம்பிக்க உள்ளதால் அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் இந்த அழைப்பை ஏற்று வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

★ எங்களிடம் பாடசாலை அப்பியாசக் கொப்பிகள், கணித உபகரணங்கள், அச்சக பாவனைக்குரிய பேப்பர்கள், போட் வகை, பிறின்ரிங் மை மற்றும் பல பொருள்களை நியாய விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

நன்றி!

— சிங்கம் இன்டஸ்றீஸ் உரிமையாளர்.

T.P.No. 021 - 2783

(சி/9939)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைநகர் குறோஸ்னி எந்நேரமும் வீழும் நிலை

## ரஷ்யப்படைகள் தயாராகின்றன

மொஸ்கோ, நவ 23

**செச்சினியத் தலைநகர் குறோஸ்னியை எந்தக் கட்டத்திலும் கைப்பற்றக்கூடிய தயார் நிலையில் ரஷ்யப் படைகள் இருப்பதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.**

குறோஸ்னி விமான நிலையத்தில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் ரஷ்யப் படைகள் நிலைகொண்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடைபெற்ற ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பிற்கான அமைப்புக் கூட்டத்தில் ரஷ்யா மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதும் செச்சினியா மீதான தாக்குதல்களை ரஷ்யா தொடர்வதைப் பல நாடுகள் கண்டனம் செய்துள்ளன.

இதற்கிடையில்—

தலைநகர் குறோஸ்னியை ரஷ்யப் படைகள் நெருங்கி விட்டதை அடுத்து மக்கள் பெருமளவில் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

அதேசமயம்—

செச்சினியா மீதான ரஷ்யத் தாக்குதல் மற்றும் ஆப்கானிஸ்தான் மீதான ஐ. நா. தடை என்பன குறித்து விவாதிப்பதற்காக இஸ்லாமிய நாடுகளின் அவசர கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று பாகிஸ்தானின் சமயக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் கோரி உள்ளன.

(ஐ-6-8)

## எதிர்த்துப் போராட நவாஸ்ஷெரீப் முடிவு

இஸ்லாமாபாத், நவ. 23

இராணுவப் புரட்சி மூலம் தனது அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்டதை எதிர்த்து பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் சட்ட ரீதியில் போராடப் போவதாக இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஐ-6 8)

## இஸ்ரேல் - பலஸ்தீன பேச்சுக்கள் தோல்வி

ஜெருசலேம், நவ. 23

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குக்கரைப்பிரதேசத்தினைபலஸ்தீனத்திடம் ஒப்படைப்பது குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வி அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையே நிலவிவந்த கருத்து வேறுபாடுகள் இன்னும் தீர்க்கப்படாமையினாலேயே பேச்சு முறிவடைந்ததாக பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்ட இடைக்கால ஒப்பந்தத்தின் கீழ் மேற்குக் கரை பிரதேசத்தில் இருந்து இஸ்ரேல் படைகள் விலகவேண்டிய பகுதிகளை நிர்ணயிப்பது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தலையிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் தெரிவித்துள்ளார். பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

[ஐ-6-8]

## விமானத்தை நான் கடத்தவில்லை; ஜனநாயகம்தான்கடத்தப்பட்டுள்ளது!

### 'ரைம்' சஞ்சிகைக்கு நவாஸ் ஷெரீப் பேட்டி



இஸ்லாமாபாத், நவ. 23

''பாகிஸ்தான் விமானம் எதனையும் நான் கடத்தவில்லை. ஆனால் நாட்டின் ஜனநாயகம்தான், கடத்தப்பட்டு விட்டது''

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ்ஷெரீப் இவ்வாறு தெரிவித்தார்

அமெரிக்க வார இதழான 'ரைம்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விமானம் ஒன்றைக் கடத்துவது என்றால் துப்பாக்கியைக் காட்டி, விமானியை மிரட்டி விமானத்தை நாம் சொல்லும் இடத்துக்கு கொண்டு செல்வது.

நான் எப்படி அத்தகைய ஒரு செயலைச் செய்ய முடியும்?

என்னை ஒரு மாதத்துக்கும் கூடுதலான காலம் காவலில் வைத்தது சட்டவிரோதமானது, இந்த நடவடிக்கை எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது

என்னை யாரும் சித்திரவதை செய்யவில்லை. ஆனால் என்னை எங்கே வைத்திருந்தார்கள் என்பது தெரியவில்லை. கடந்த 28 நாளாகளாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடம் என்ற ரீதியில் என்னை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எனக்கு நீதி கிடைக்குமா இல்லையா என்பது குறித்து காலம் தான் பதில்சொல்ல வேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த மாதம் ஆட்சி கவிழ்க்கப்பட்டது முதல் காவலில் வைக்கப்பட்டிருந்த நவாஸ் ஷெரீப் கடந்த வெள்ளியன்று கராச்சி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிமன்றில் வைத்தே அவர் இந்தப் பேட்டியை வழங்கி இருந்தார்.

(ஐ-6-8)

## குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு 'அல் நவாஸ்' குழு பொறுப்பு

இஸ்லாமாபாத், நவ. 23

பாகிஸ்தானின் லாகூர் நகரில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற சைக்கிள் குண்டு வெடிப்புக்கு தாமே பொறுப்பு என 'அல் நவாஸ்' என்ற குழு உரிமை கோரி உள்ளது.

இராணுவப் புரட்சி மூலம் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதை எதிர்த்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும்—

நாட்டில் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்படும் வரை இத்தகைய தாக்குதல்கள் தொடரும் எனவும்—

அந்தக் குழு அறிவித்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் பத்திரிகைஒன்றுக்கு அறிக்கை ஒன்றையும் அந்தக் குழு அனுப்பியுள்ளது [ஐ-6-8]

## 23 வருட கால நண்பனைக் குதறிக் கொன்ற நீர்யானை

### பிரான்ஸில் துயரச் சம்பவம்

பாரிஸ், நவ 23



'அன்பு என்பது இலகுவான ஒன்றல்ல. பிரான்ஸின் மிருகக்காட்சிச் சாலை ஒன்றில் இடம்பெற்ற துயரமிகு சம்பவம் ஒன்று இதனையே உணர்த்துகிறது.

பிரான்ஸின் டெஸாக் மிருகக்காட்சிச்சாலையின் பணிப்பாளர் ஜீன் டுகுயிங் (வயது 62) கடந்த வாரம் அவரது விருப்பத்துக்குரிய வளர்ப்புப் பிராணியான 'கோமிர்' என்ற நீர்யானையால் கடித்து குதறப்பட்டுக் கொல்லப்பட்டார்.

26 வயதாகும் கோமிர் அதன் மூன்றாவது வயதில் பெஸாக் காட்சிச் சாலைக்கு வந்து சேர்ந்தது. அன்று முதல் கடந்த 23 வருடங்களாக 'கோமிரும்' டுகுயிங்கும் இணை பிரியாத நண்பர்களாக இருந்து வந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் இருவரும் சிறிது நேரமாவது சேர்ந்து விளையாடுது வாடிக்கையான நிகழ்ச்சி.

எனினும் கடந்த சில வாரங்களாக இருவரது நட்பிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. டுகுயிங் ஒரு 'டிராக்டர் வாகனத்தைக் கொள்வனவு செய்தது முதல் இந்த மாற்றம் ஏற்பட்டது.

மிருகக்காட்சிச் சாலை வேலைகள், காரணமாக டுகுயிங் 'டிராக்டர்' வாகனத்தில் சுற்றித் திரிவது அதிகரித்தது. இதனால் கோமிருடன் விளையாடுவதை அவர் நிறுத்திக் கொண்டார்.

''ஒவ்வொரு முறையும் டுகுயிங் 'டிராக்டர்' வாகனத்தில் பயணம் செய்யும் போதும் கோமிர் விசர் பிடித்த மாதிரியான நிலையில் காணப்பட்டது'' என்கிறார் டுகுயிங்கின் நண்பரான ஜீன்—கலூட்.

டுகுயிங் தன்னைப் புறக்கணிப்பதாக கவலை அடைந்த கோமிர் ஒரு நாள் திடீரென பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியைத் தாண்டி வெளியே வந்து தனது நீண்ட நாளைய நண்பனான டுகுயிங்கை கடித்து கொன்று விட்டது

''ஓர் அதிசயமான அன்புக் கதை துயரமாகமுடிந்து விட்டது'' என்றார் ஜீன்—கலூட்.

(ஜீன் டுகுயிங்கும் கோமிரும் செல்லமாக விளையாடுவதை படத்தில் காணலாம்.)

[ஐ-6]

எல்லையில் சுடுவதில்லை

## இந்திய -- பாகிஸ்தான் படைகள் இணக்கம்

புதுடில்லி, நவ. 23

இந்திய பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதை நிறுத்துவது என இந்தியாவும் பாகிஸ்தானும் உடன்பாடு செய்துள்ளன.

லாகூரில் நேற்று முன்தினம் இந்திய எல்லைக் காவல் படைக்கும் பாகிஸ்தான் 'ரேஞ்சேஸ்' படைக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

எல்லைப் பகுதியில் அவ்வப்போது இடம்பெறும் சிறுசிறு துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களை சமாளிக்கும் விதத்தில் உடனடிக் கூட்டங்களை நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டதாக இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஐ-6-8]

உலக அரங்கில்

## மலேசியாவில் தேர்தல் பிரசாரம்

கோலாலம்பூர், நவ. 23

மலேசியாவில் இந்த மாதம் 29 ஆம் திகதி நடைபெற உள்ளதேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இந்தத் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி கடந்த 30 வருடங்களில் முதல் தடவையாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறமாட்டாது என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-6-4)

## சோனியாவின் அறிவிப்புக்கு வரவேற்பு

சென்னை, நவ. 23

இந்திய முன்னாள் பிரதமர் ரஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள நளினியின் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கும் படி ராஜீவ்காந்தியின் துணைவியார் சோனியாகாந்தி ஜனாதிபதி கே. ஆர், நாராயணனுக்கு பரிந்துரை செய்ததை தமிழகக் கட்சித் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

சோனியாகாந்தியின் அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டியது எனவும்—

சோனியா காந்தியின் இந்த அறிவிப்பு அவர் ஒரு மனித நேயம் மிக்கவர் என்பதை நிரூபித்து விட்டது எனவும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மறவன்புலோ வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னையா இராஜசேகரம் என்பவரதுதேசியஅ. அட்டை (712193620V) விசேட அ, அட்டை [091050814) இரண்டும் நாவலர் சந்தியில் இருந்து நாவற்குழிக்குச்செல்லும் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

[71176]

### இறைச்சிக் கோழிகள் தேவை

Broiler இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். தன பாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி,நல்லூர்.

(71182)

### விற்பனைக்கு

பிறவுண் கலர் டோமன் 5 மாதம் [ஆண்)டாங்சோன் 8 மாதம் (ஆண்) நாய்ககுட்டிகள் விற்பனைக்கு உண்டு. நானைபுதன்கிழமை சந்திக்கவும் தொடர்பு மு ஐயாத்துரை M S லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(71177)

நல்லின ஓட்டு எலுமிச்சை, ஓட்டு விலாட், கறுத்தக் கொழும்பான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு K K. குகனேசன், மங்களா பவனம் கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(71143)

சிங்கர் தையல் இயந்திரம் மொடல் 248 மோட்டருடன் கூடியது மற்றும் நஷனல் [National]எலெக்ரிக்மல் ரிறைஸ் குக்கர், Sanyo, காஸ் குக்கர் என்பனவிற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: எஸ். யூகபாணி ''மலர் வாசம்'' ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

[71092]

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் தனிவீடு அல்லது அனெக்ஸ் [Annex] வாடகைக்கு தேவை. [3 பேர் அடங்கிய சிறிய குடும்பத்திற்கு] தொடர்பு: விளம்பர இல. 973, மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(71175)

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் குளப்பிட்டி- ஆனைக்கோட்டை வீதியிலுள்ள உபதபாற்கந்தோருக்கு அண்மையில் அமைந்த $4\frac{1}{4}$ பரப்புக் காணியும் அதனுடன் சகல வசதிகளும் அடங்கப் பெற்ற வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: எஸ்.யூகபாணி, 'மலர்வாசம்' ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(71090)

## கண்ணீர்ப் பூக்கள்

கடலில கலந்த எம் இனிய தோழர்களான

**சி. ரவிசங்கர் பூ. சுந்தர்வன்**
**பா. பிரதீபன் சு. சிவோத்மன்**

ஆகிய நால்வரது ஆத்மா சாந்தியடைவதாக!

மொறோன் கல்வி நிலையம்,
2000 A/L கலை.வர்த்தக பிரிவு.
மாணவர்கள்.

பருத்தித்துறை.

[71189]


**இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்**

CEDRIC

**மண்ணெண்ணெய் கேஸ் குகர்**

- சிலிண்டர் தேவையில்லை
- கேஸைப் போன்ற நீலச்சுவாலையுடன் எரியக்கூடியது.
- மணம் இல்லை. கரிபிடிக்காது. காற்று அழுத்தம் தேவையில்லை.



தொலைபேசி இல. 323223
98, Braybrook Place, Colombo 02.
தலைமை அலுவலகம்
172,Kensington Church Street, Kensington, London. W8 BN
Tel: 0171792 1881 (10 Lines) Fax: 0171 243 8034



ஏஜண்டுகள் தேவை

[சி/9 913]



உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் கார்த்திகைத் திங்கள் 8 ஆம் நாள் (24 - 11 - 99) புதன்கிழமை முற்பகல் 9-52 மணி முதல் 10-28 மணி வரையுள்ள தனு இலக்கினமும் ரோகிணி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**கஜேந்திரன்**
**(கண்ணன்)**
(வீடியோ போக்கஸ்)
**அவர்களுக்கும்**



எமது புத்திரி
திருநிறை செல்வி
**புனிதசாந்தி**
**அவர்களுக்கும்**

இறைவன் துணைகொண்டு காட்டுப்புலம் முருகன் கோயிலில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: வரவேற்புபசாரம் 25 - 11 - 99 வியாழக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு பணமகனில்லத்தில் நடைபெறும்.

'அற்புதராணி அகம்'
திரு. திருமதி தெ. இராசசிங்கம்
(சிறிய தந்தை)
திருமதி தெ. நவரட்ணம்
பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

திரு. திருமதி தர்மகிருஷ்ணர்
திரு. இ. லோகராசா (மாமன்)
கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

★ தனிப்பட்ட அழைப்பிதழ் கொடுக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

(சி/9938)

## மதுரகவிக்கு எங்கள் வாழ்த்துக்கள்!

காரை மாதா கன்னித் தமிழாள் (ல்) மகிழத்தந்த கவிஞர்
மதுரகவி
**காரை. எம். பி. அருளானந்தன்**
ஆசிரியர் அவர்கள் ஜேர்மனியிலுள்ள
'மண் சஞ்சிகை' கலையகம் நடத்திய அகில உலக
ரீதியிலான கவிதைப் போட்டியில்
''முதலாம் இடம்''
பெற்று சிறந்த விருது சூடி
இலங்கை நாட்டுக்கும் எங்கள் ஊருக்கும் பெருமை
தேடித்தந்தமைக்கு மனமகிழ்ந்து வாழ்த்துவோர்:

காரைநகர் மக்கள்,
காரை. - யாழ்: வர்த்தகர்கள்.

[71179]

## கல்வி ஆண்டு - 2000

**[ தரம் - 06 விசேட புதிய பிரிவு ]**

புதிய கல்வித் திட்டத்திற்கு அமைவான
கற்பித்தல் முறைகள்
கம்பியூட்டர் தொடர்பான ஆரம்ப அறிவை வழங்கும்
செய்முறையுடன் கூடிய வகுப்புகள்
புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல்
பெற்ற 30 மாணவர்க்கு மாத்திரம்.

விண்ணப்ப முடிவு: 30-11-99

The Express Institute
IRUPALAI KOPAY

[71187] - அதிபர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 11 - 1952 | 24 - 10 - 1999 |

**அமரர் சுவாமிநாதன் சின்னராசா**

[கந்தன் ஸ்ரோர்ஸ் — பண்டத்தரிப்பு. றாஜ்ஹோட்டல் வவுனியா, T. S S. ராண்ஸ்போர்ட் உரிமையாளரும் பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலய முன்னாள் தலைவரும்]

23 - 11 - 1999

ஊரார் போற்றும் உத்தம சீலராய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
எம் குடும்பத்தின் குல தீபமாய் இருந்து
எம் அனைவரையும் வழி நடத்திய
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரான்பற்று
பெரியவளவு முருகனை வேண்டுகின்றோம்.

எமது பாசமிகு தந்தையாரின் மரணச் செய்தி அறிந்து அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், பிரான்பற்று மக்கள் நலன் புரிச் சங்கத் தினருக்கும் பிரான்பற்று மக்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயத்தில் இன்று (23-11-99) செய்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெறவிருக்கும் பிரார்த்தனையிலும், ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற விருக்கும் அன்னதானத்திலும் பங்கு கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

கண்ணன், ஜெகன்,
[பிள்ளைகள்]

வவுனியா. (71160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் வந்து மீளக்குடியேறியோர்
# விசேட அ. அட்டை பெறுவதில் தாமதம்

வலிகாமம் மேற்கு, நவ. 23

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் புதிதாக விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு ஆறுமாதங்களுக்கு மேலாகியும் விசேட அடையாள அட்டைகள் கிடைக்கவில்லை. இதனால் இவர்கள் சோதனைச் சாவடிகளில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

கப்பல், விமானம் மூலம் வந்து மீளக்குடியமர்ந்த நூற்றுக்கணக்கானோர் விசேட அடையாள அட்டைக்கு கிராம உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்களைக் கையளித்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும் விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை.

ஆனால் இவர்கள் சோதனைச் சாவடிகளில் படையினரால் சோதனை செய்யப்படும் போது கப்பல், விமானப் பதிவுகளைக் காண்பிக்க வேண்டியுள்ளது. அச்சமயம் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் கிராம உத்தியோகத்தர்களிடம் முறையிடுகின்றனர். (ஐ 4-175)

## யூனியன் கல்லூரியில் தற்காலிக வகுப்பறை

சண்டிலிப்பாய், நவ. 23

மருதனார்மடத்தில் இடம்பெயர்ந்து இயங்கி வரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 6 லட்சத்து 42 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட தற்காலிக வகுப்பறை மண்டபம் அண்மையில் வடபகுதி மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் என். கே. ஒபடகேயினால் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் சு. புண்ணியசீலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வருடாந்த பரிசளிப்பு விழா, பாண்ட் வாத்திய அரங்கேற்ற விழா என்பனவும் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். திருமதி சுபத்திராதேவி சண்முகநாதன் பரிசில்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஐ-135)

2 ஆயிரம் ஆண்டில்

## 100 வீடுகளை அமைக்க காணி தெரிவுசெய்ய கோரிக்கை

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 2000 ஆம் ஆண்டில் 100 வீடுகளை நிர்மாணிப்பதற்குரிய நடவடிக்கைகளை பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

25 வீடுகள் ஒரே இடத்தில் அமையக் கூடியவாறு இடங்களைத் தெரிவு செய்யுமாறு பிரதேச செயலர் கா. சந்திரராசா கிராம அலுவலர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். தேர்தல் தொகுதி தோறும் 100 வீடுகளை அமைக்கும் திட்டத்தின் கீழ் இத்திட்டம் அமையவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளனர் இத்திட்டத்துக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் ஒவ்வொரு வீட்டுக்கும் 30 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கவுள்ளனர். வடபகுதி மீள்குடியேற்ற புனர்நிர்மாண புனர்வாழ்வு அதிகார சபையும் 25 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கவுள்ளது.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் இந்த ஆண்டுக்கான இந்தத் திட்டத்தின் கீழ் அராலிப் பகுதியில் உள்ள அரசாங்கக் காணிகளிலும், ஆலயங்களுக்குச் சொந்தமான காணிகளிலும் தற்போது 100 வீடுகள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ—175)

## மாலுமிகள் பயிற்சி பெறும் மட்டு. மாணவருக்கு அச்சுறுத்தல்
### நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையீடு

கொழும்பு, நவ. 23

நீர்கொழும்பு கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியில் மாலுமிகள் பயிற்சிநெறியை மேற்கொண்டு வந்த மட்டக்களப்புமாவட்டத்தைசேர்ந்த 6 பயிற்சியாளர்கள் அச்சுறுத்தல் காரணமாக பயிற்சியை இடை நடுவில் கைவிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பில் இடம்பெறும் குண்டுவெடிப்புகளுடன் தொடர்புபடுத்தி தம் மீது அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி. செல்வராசாவுக்கு இவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இச்சம்பவம் குறித்துமீன்பிடித்துறை அமைச்சருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு மீன்பிடி பயிற்சிக்கல்லூரியில் மாலுமிகள் பயிற்சிநெறி ஆரம்பிப்பதற்குத் தேவையான வள்ளம் இதுவரை மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் இம்மாணவர்கள் நீர்கொழும்புக்கு வர வேண்டிய நிலையேற்பட்டது.

மட்டக்களப்புக்கு ஏற்கனவே வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்ட பயிற்சி வள்ளங்களை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

அதுவரை இப்பயிற்சி மாலுமிகள் மட்டக்களப்பு மீன்பிடி கல்லூரியில் தங்கள் வரவைப் பதிவு செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்துதர வேண்டும்.

இப்படி அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## சுயமுயற்சியாளர்களுக்கான ஓய்வூதியத்தில் 26பேர் இணைவு

சண்டிலிப்பாய், நவ. 23

சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 26 பேர் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

சமூகசேவை அமைச்சின் கீழ் செயற்படும் சமூகசேவை பாதுகாப்புச் சபையினால் நிர்வகிக்கப்படும் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள மேற்படி 26 பேருக்குமான உத்தியோக பூர்வசான்றிதழ்களை கடந்த 17 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலர் கா. சந்திரராசா வழங்கினார்.

இவர்கள் 60 வயதை அடைந்தவுடன் தங்கள் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவை தபால்அலுவலகங்கள் ஊடாகப்பெற முடியும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் இது பற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (ஐ-135)

## வீதி புனரமைப்பு ஆலோசனைக் கூட்டம்

வலி. மேற்கு, நவ. 23

சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் வீதிகளைப்புனரமைப்பதற்கான பத்து ஆண்டுத் திட்டம் தயாரிப்பது தொடர்பான பிரதேச மட்டக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர், யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் உட்பட பிரதேச மட்டத்திலுள்ள பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல வீதிகளையும் எதிர்காலத்துக்கு ஏற்றவாறு எவ்வாறு திருத்தியமைக்க வேண்டும் என்பது தொடர்பாக பலர் ஆலோசனைகளைத் தெரிவித்தனர். [ஐ-4-175]

## யுவதிகள் இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 23

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக வந்து சிறைநார் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த யுவதிகள் இருவர் கடந்த வெள்ளியன்று படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சண்முகம் சர்மிளா (வயது 20 — மட்டுவில் வடக்கு, மட்டுவில்), ஏகாம்பரமூர்த்தி பத்மினி (வயது 19 — நீர்வேலி மேற்கு, நீர்வேலி) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். [ஐ-7]

## நிவாரணப் பொருள்கள் விநியோகம்

மானிப்பாய் ப. நோ கூ. சங்கக் கிளைகளில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

பாவனையாளர்களுக்கு 5 லீற்றர் மண்ணெண்ணெய்யும், நாட்டரிசி, சீனி என்பனவும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-100)

## கிராம அலுவலர்களுக்கு புதிய சம்பளத் திட்டம்
### பதவிப் பெயரிலும் மாற்றம் செய்யப்படும்

கொழும்பு, நவ 23

கிராமசேவை உத்தியோகத்தர்கள் இனிமேல் 'நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர்கள்' என அழைக்கப்படுவர்.

இது தொடர்பான அரசாங்க அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கிராமசேவை உத்தியோகத்தர்களின் பதவி நிலைப் பெயரில் மாற்றம் கொண்டுவருவது மட்டுமன்றி இதற்குச் சமமான அரசாங்க சேவையில் உள்ள விசேடதர உத்தியோகத்தர்கள் பெறும் சம்பள அளவுத்திட்டத்துக்குள் கிராமசேவை உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்படுவார்கள் எனவும்—

இந்தப்புதிய சம்பளத்திட்டத்தை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்துவது தொடர்பான பிரேரணை அமைச்சரவைக்கு விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும்—

அதேவேளை—

15 வருடங்கள் சேவையாற்றிய 2 ஆம் தர கிராம சேவையாளர்கள் தரம் ஒன்றுக்கு பதவி உயர்த்தப்படுவார்கள் எனவும்—

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ-7

## வடக்குகிழக்குமாகாணசபைக்கு உடன்தேர்தல்நடத்தகோரிமனு

வடக்கு – கிழக்கு மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு கோரி மனு ஒன்று கடந்த புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை சுயாதீன பிரஜைகள் ஒன்றியத்தின் தலைவரான வவுனியா மடுகந்தையைச் சேர்ந்த இ. எம். குமாரசிங்கவே இம மனுவை சட்டத்தரணி தம்பிக தர்மதாசஊடாக தாக்கல் செய்திருக்கிறார்.

''இலங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வடக்கு- கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்பட்ட சட்டவாக்கு அதிகார உரிமை, தேர்தலை நடத்தாமல் இருப்பதன் மூலம் அம் மாகாண மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. ஏனைய மாகாணங்களின் மக்கள் அந்த உரிமையை அனுபவிக்கக் கூடியதாகஇருக்கின்றது.

''எனவே வடக்கு—கிழக்கு மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட வேண்டும்'' — என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனு மீதான விசாரணை விரைவில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க-3)

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி:

## மாணவன் காணாமற்போன சம்பவத்துடன் தொடர்பில்லை
### படைத்தரப்பு அறிக்கை

மட்டக்களப்பு, நவ. 23

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் குகதாசன் மதுரேசன் காணாமற் போன சம்பவத்துக்கும் இராணுவத்துக்கும் தொடர்புகள் இல்லையென இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜீ. சீ. ஈ. சாதாரணதர வகுப்பில் கல்வி கற்கும் இம்மாணவர் கடந்த 14 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளார்.

இவர் காணாமற்போனது தொடர்பாக பெற்றோர் உறவினர்கள் மத்தியில் பல்வேறு ஊகங்கள் நிலவுகின்றன.

இது குறித்து மட்டக்களப்பு பாதுகாப்பு இணைப்பதிகாரியினால் கடந்த சனிக்கிழமை அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இம் மாணவன் காணாமலபோனது தொடர்பாக எவ்வித பொறுப்புகளுமின்றி இராணுவம் மீது பழி போடப்பட்டுள்ளது என்றும்—

இவனைப் படையினர் கடமையாகத்தாக்கி மறைத்து வைத்திருக்கிறார்கள் என்றும் எண்ணுகிறார்கள் எனவும்—

இந்த ஊகங்களில் எவ்வித் உண்மைகளும் இல்லை என்றும்—

படையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-5)

## யாழ். நகரில் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். நகரப் பகுதியில் சமீப நாள்களாகத் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன.

சுண்டுக்குளி சுவாட்ஸ் லேனில் கடந்த வெள்ளி இரவு இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் வீடு ஒன்றில் இருந்து 14 ஆயிரம் ரூபா பணம், 600 சிங்கப்பூர் டொலர்கள் மற்றும் ஆயிரத்து 500 வீஸா பயணக் காசோலைகள் ஆகியவை திருடப்பட்டுள்ளன.

இரவு நேரம் ஜன்னல் கம்பியை வளைத்து உள்ளே சென்ற திருடர்கள் மேற்கண்ட தொகைப் பணத்துடன் மண்வெட்டி, கத்தி, மழைக்கோட், கானுடன் மண்எண்ணெய், குடை ஆகியவற்றையும் அங்கிருந்த மைலோ போன்றவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

திருடர்கள் மயக்க மருந்து எதனையும் பயன்படுத்தியிருக்கலாம் என்றும்—

திருட்டு இடம்பெற்றசமயம் வீட்டிலிருந்த இளம் குடும்பத்தினர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது

இந்தத் திருட்டுத் தொடர்பாக அந்த வீட்டில் வசித்து வரும் சேவியர் என்பவர் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (இ)

## ஈவினைப் பகுதிக்கு விரைவில் மின்

கொக்குவில், நவ. 23

ஈவினைப் பகுதிக்கு விரைவில் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. அப்பகுதி வீதிகளில் புதியமின் கம்பங்கள் நடும் பணி துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (ஐ-69)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 23 |
| — | — |
| 10 | 11 |
| — | — |
| 1927 | 1990 |

அமரர் **சண்முகம் ஞானப்பிரகாசம்**
( யாழ். மா. சி. க. கூ. ச. சமாசத்தின் ஸ்தாபகரும், முன்னாள் தலைவரும் )

சமாசத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் ச. ஞானப் பிரகாசம் அவர்களின் 9 ஆவது ஆண்டினை நினைவு கூருகின்றோம்.

யாழ். மாவட்ட
சி. க. வ. கூ. ச சமாசம்.

இல. 637 (383),
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9909)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க ஸ்தாபகரும்
சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளருமாகிய

அமரர்
**சண்முகம் ஞானப்பிரகாசம்**


அவர்களை இந்நாளில் நினைவுகூர்ந்து, அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். இந்நாளில் அவருடைய ஞாபகார்த்தமாக கட்டடத் திறப்புவிழா நடைபெறவுள்ளது என்பதையும் அறியத்தருகின் றோம்.

சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,
கோப்பாய் பிராந்தியம்.

(71172)

## மூன்றாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

23 - 11 - 1999



அன்னை மடியில்
14 - 02 - 1963

ஆண்டவன் அடியில்
23 11 - 1996

செல்வி
**சாந்தினி பாலகிருஷ்ணன்**
( அரச தாதிய உத்தியோக சேவை )

எங்கள் குலக்கொழுந்தே! விலைமதிப்பற்ற இரத் தினமே! எங்களை ஆறாத்துயரில் விட்டுப் பிரிந்தாயே! நாங்கள் மீளாச் சோகத்தில் வருந்தித் துடிக்கின்றோம். உனது பிரிவிலும் கூட வாரி வழங்கிய கண்ணா! நாம் இறக்கும் வரை உன்னை மறக்க முடியாது. உனது புனித ஆத்மாவின் சாந்திக்காக என்றென்றும் இறைஞ்சும் உயிர்ப் பாசங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
சக தாதிய உத்தியோகத்தர்.

தும்பளை வீதி,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/9872)

## கணனிகள் கொள்வனவு

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரிக்கு கொழும் பில் இருந்து புதிய கணனிகள் இரண்டு தருவிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது

2000 ஆண்டில் அனைத்து மாணவருக்கும் கணனி தொடர்பான ஆரம்ப அறி வினை வழங்கும் நோக்குட னேயே புதிய கணனிகள் கொள்வனவு செய்யப்பட் டுள்ளன [க-185]

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச் சபைத்தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

''மருதனார்மடம் இராம நாதன் நுண்கலைக்கழ கத்தில் 50மாணவர்களுக் கான விடுதி இல. 2 அமைத்தல்''.

கட்டடநிர்மாணவேலை களுக்காக இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் 6 (M6) அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உள்ள, சிறீலங்கா தேசிய நிர்மாண ஒப்பந்த காரர் சபையில் (NCCASL) அங்கத்தவராகவுள்ள ஒப் பந்தகாரர்கள் கேள்விப் பத்திரம் பெறத் தகுதி யுடையவராவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வேலைகள் எந்திர வியலாளர் (குடிசார்) அவர் களிடமிருந்து 01-12-99 வரை ஒப்பந்தகாரர் பதி வுப் புத்தகத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் காசாளர் கரும பீடத்தில் பின்வரும் வைப் பீடுகளுக்கான தொகை யைப் பணமாகச் செலுத் திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத வைப் புத்தொகை — 1,000/-
மீளளிக்கக்கூடிய வைப் புத்தொகை — 25,000/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 10-12-99 காலை 10 00 மணிக்கு முன் 'தலைவர், கேள்விச்சபை, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம்' அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப் பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளகேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவையேற்படின் கேள் விப்பத்திரங்களை யாழ்ப் பாணப் பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏது மின்றிக் கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

கலாநிதி க. குணராசா,
பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
தபாற்பெட்டி இல. 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி/9893)

## யா/யூனியன் கல்லூரி
"வணிக தீபம்" (சுடர் - 04)
## வெளியீட்டு விழா

காலம்: 23 - 11 - 99 செவ்வாய்க்கிழமை
நேரம்: முற்பகல் 10.00 [ S. L. T. ]
இடம்: யூனியன் கல்லூரி மண்டபம்
பிரதம விருந்தினர்: திரு. க. தேவராஜா
(தலைவர், வணிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வர்த்தக மாணவர் ஒன்றியம்,
யா/யூனியன் கல்லூரி.

தெல்லிப்பழை.

(71180)

## ஓராண்டு நிறைவு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 | 05 |
| — | — |
| 05 | 11 |
| — | — |
| 1941 | 1998 |

**அமரர் மாணிக்கம் அருமைலிங்கம்**
திதி: 23-11-1999 அபரப் பிரதமை


சுந்தையை இழந்த நாம் நிதம்
சிந்தை யுருகியிங்கு - எம்
தந்தை எங்குற்றார் என
முந்தை வினையை நொந்துயிர்க்கின்றோம்.
மீளாத்துயர் - ஆறாது - ஆறாது என்றும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்..

14, திருமகள் வீதி,
அரியாலை மத்தி,
யாழ்ப்பாணம்.

[71165]

## ஈராண்டு நினைவினில்..



அமரர்
**செல்வம் இரகுநாதன்**

இம்மைக்காய் 13-10-1958
மறுமைக்காய் 15-12-1997

தந்தையாய் நமக்களித்த
தகைசான்ற அப்பாவை
தப்பிக்கும் கணக்கின்றி
தன்கணக்கை அவன்காட்டி
தன் பாதம் அவனழைத்து
இன்றோடு ஈராண்டு......இன்றோடு ஈராண்டு.
ஆண்டிரண்டு ஆயிடினும் அப்பா நினைவு
மாறாதப்பா!
ஆண்டுகள் ஓடிடினும் எமை யாண்டநிலை
மறவோமப்பா!
ஆண்டவனடியில் இன்று அவனோடு எங்களப்பா!
ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம் அவனையப்பா!
ஓம் சாந்தி......! ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...!

அன்பு மனைவி, பிள்ளைகள்,

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(71181)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மடுக் கொலைகள்

மடுமாதா தேவாலயத்தில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற கோரச் சம்பவத்தில் அங்கு தஞ்சமடைந்திருந்த பொது மக்களில் 38 பேர் பலி கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் பதின்மூன்று பேர் சிறுவர்கள்.

இந்தக் கொடுமையான சம்பவத்தைக் கேள்வியுற்றுத் தமிழ் மக்கள் அனைவரும் பதைபதைத்துப் போயுள்ளனர். அவர்கள் வீடுகளில் சோகம் பரவியுள்ளது. ஒவ்வொரு தமிழனும் வேதனையால் துடிக்கின்றான். இச்சம்பவத்தில் உறவுகளைப் பறிகொடுத்து ஏங்கி நிற்கும் மக்களுக்கு எமது அனுதாபங்கள்.

தங்கள் உயிர்களைக் காப்பாற்ற தேவாலயத்தில் தங்கியிருந்த அப்பாவி மக்கள் மீது இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

அகதிகளாக அலைந்து திரிந்த குடிமக்கள், தேவாலயப் பிரதேசம் பாதுகாப்பானது என்ற மனநம்பிக்கையுடன் அங்கு தங்கியிருந்த வேளையில், அவர்களைக் கொன்றொழித்தது கண்டிக்கப்பட வேண்டியதாகும். போரில் ஈடுபட்டு இரண்டு தரப்பினரும் இச்சம்பவத்துக்கு ஒருவர் மற்றவர் மீது குற்றம் சுமத்துகின்றனர். எனினும் அங்கிருந்த— பாதிக்கப்பட்ட— மக்களுக்கு உண்மை தெரியும். புனிதஸ்தலம் ஒன்றைப் போர்க்களமாக்கி அப்பாவி மக்களைக் கொன்றமை மனித நேயத்துக்கு அடுக்காத அநியாயமே.

அகதிகள் தஞ்சம் அடைந்துள்ள இடங்களை இலக்காகக் கொண்டு தாக்குதல்களை நடத்துவது சர்வதேசப் போர் நியமங்களுக்கு முற்றிலும் முரணான, பாதகமான செயல். தேவாலயம் ஒன்றில் அதுவும் கத்தோலிக்க மக்கள் மட்டுமல்லாது ஏனைய மதத்தினரும் போற்றி வணங்கும் மடுப்பதியில் சர்வதேசப் போர் விதிமுறைகள் மீறப்பட்டிருப்பது எல்லோரையும் புண்படுத்தி உள்ளது.

மடுமாதா தேவாலயம் 450 வருடகாலச் சரித்திரப் பெருமை பெற்ற புனித ஸ்தலமாகும். கிறிஸ்தவ மக்கள் மட்டுமன்றி ஏனைய சமய மக்களும் புனித யாத்திரை சென்று இறையருள் பெறும் கீர்த்தி பெற்ற வணக்கஸ்தலம். அதற்கும் சேத முண்டாக்கி அங்கு தங்கியிருந்த அப்பாவி அகதி மக்கள் மீது தாக்குதலும் நடத்தி அவர்களைக் கொன்றும் காயமுறச் செய்தும் உள்ள இந்தக் கொடூரம் மன்னிக்கக்கூடிய ஒன்றல்ல.

இறந்தவர்களின் உயிர்களை எவரும் திருப்பிக்கொடுக்க முடியாது. மடுத்தேவாலயப் பிரதேசத்தில் அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளார்கள் என்பது தெரிந்திருந்தும் அதனை இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தியமை எல்லோரையும் விசனமுறவும் வேதனைப்படவும் வைத்துள்ளது.

இனிமேலாவது அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைப்பதனையும், கேடயமாகப் பயன்படுத்துவதனையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். போர் புரியும் இரு தரப்பினருக்கும் இடையில் குடிமக்கள் சிக்குண்டு அழிவதற்கும் இடந்தரலாகாது. தமது இராணுவ நோக்கங்களை அடைவதற்காக அப்பாவிகளை பலி கொள்ளாதிருப்பதில் இரண்டு பகுதியினரும் முழு அக்கறை செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

போர் தொடர்வதாலேயே தமிழ் மக்கள் இவ்வாறு அழித்தொழிக்கப்படுகிறார்கள்; அகதிகளாகி அலைந்து அலைந்து அவதிப்படுகிறார்கள். போரை நிறுத்துவது குறித்து அதற்கான சூழ்நிலையை உண்டாக்குவது குறித்து இப்போதாவது அரசாங்கம் சிந்திக்குமா?

# சமயம் ஆன்மீக நோக்கை இழந்தவேளை மனித குலத்தைக் காக்க வந்த அவதாரம்

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 74 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

ஆன்மீக வாழ்வின் வழியை நமக்குக் காட்டுவதற்கு நம்மிடையே ஒரு தெய்வம் மனித உருவில் நடமாடுகிறார். கிருஷ்ணர், இராமர், யேசு தோன்றிய காலத்தில் வாழ்ந்த பாக்கியவான்கள் போல் நாமும் ஆனோம்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவரின் கோடிக்கணக்கான பக்தர்களுக்கும் கடவுள். அவரை அறிந்த மற்றோருக்கு அவர் விஞ்ஞானம் விளக்க முடியாத அற்புதங்கள் புரியும் ஒருவர். அன்பின் வடிவங்களை எல்லா மதங்களிலும் இருந்து எடுத்துக் காட்டும் ஆன்மீகக் கல்விமான். பலர் இன்னும் அவரை அறியாமல் இருக்கின்றனர். அவர்கள் அவரை விரைவில் தெரிந்து கொள்வர். அப்படித் தெரியப்படுத்துவது நமது கடமை ஆகும். ஏனெனில் நாம் பெற்ற பேற்றை எல்லாரும் பெறவேண்டும்.

மிகச் சாதாரண மனிதராகிய நாம் ஆரம்பத்தில் அவரின் அற்புதங்களையும் அதிசய சாதனைகளையும் கேட்டு அறிந்தே அவர்பால் ஈர்க்கப்படுகிறோம். சிலர் கல்விமான்கள், விஞ்ஞானிகள், மனோவியல், உளவியல் நிபுணர்கள் ஆகியோர் அந்த அற்புதங்களைப் பரிசோதிக்கச் சென்று முடிவில் அவரின் பாத நமஸ்காரம் வேண்டி நின்றனர். அவரைக் கண்களால் காணும் தர்சன பாக்கியமே போதும் என்று மந்திரிகள், உப வேந்தர்கள், மருத்துவ நிபுணர்கள், கலைஞர்கள் ஆகியோர் புட்டபர்த்தி சென்று பார்த்து வந்தனர்.

இவர்கள் தான் பல மொழிகளில் அவரைப் பற்றி அன்புத் தெய்வம் (கஸ்தூரி), சாயிபாபா அவதாரம் (ஹவர்ட் மர்பட்), கடவுளை காண்கிறோம் (சார்ல்ஸ் பென்), என் பாபாவும் நானும் (ஜோன் ஹிஸ்லொப்) என்றெல்லாம் சத்திய ஆணையுடன் நூல்கள் எழுதினர். அந்த நூல்கள், பல நாடுகளில் ஆயிரக்கணக்கான வாசகர்களை வசீகரித்து பாபாவின் ஆன்மீக வழியைப் பின்பற்ற வைத்தன.

அந்த நூல்களையும், பகவானின் போதனைகள் அடங்கிய நூல்களையும் படிக்கும் போது பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் அற்புதங்கள், அவர் கூறுவது போல், அன்பின் சிறு அடையாளங்களே என்று உணர்கிறோம். பகவானின் போதனைகளில் உள்ள அறிவுரைகளும், அவர் வாழ்வும் செயல்களும் தான் நமது காலத்தின் மிகப்பெரிய சக்தி வாய்ந்த அற்புதம் என்பதை ஒத்துக் கொள்கிறோம்.



அத்துடன், மனித உருவில் நடமாடும் அவர் எல்லாம் தெரிந்தவர், எங்கும் உள்ளவர், எல்லாம் வல்லவர் என்று அறியும் போது, நாம் பேரானந்தமும், ஆழ்ந்த நம்பிக்கையும் சாந்தியும் அடைகிறோம். இனி, ஆபத்தான வேளைகளிலும் மிகவும் வேண்டிய நேரங்களிலும் அவரின் முதல் உதவி ஏதோ ஒரு கை மூலம் ஏதோ வகையில் தமக்குக் கிடைத்ததை சாயி பக்தர்கள் அனுபவித்திருக்கிறார்கள் மிக அந்தரங்கமான அன்பின் கருணை அவை.

பகவானின் கருணையைப் பூரணமாகப் பெறுவதற்கு ஒரே வழி அவரின் போதனைகளின் படி வாழ்வது தான். ''எனது வாழ்வுதான் எனது போதனை'' என்று பாபா அன்று சொன்னார். எத்தகைய வாழ்வு அது? சாயியின் வாழ்வு, சாயியின் போதனை, சாயியின் இலட்சியங்கள், சாயி உலகிற்குக் கற்பிக்கும் பாடம் எல்லாம் ஒரே சொல்லில் அடங்கும் அன்பு பகவான் சுருக்கமாகக் கூறும் மனித மேம்பாடுகள் ஐந்து. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை (அன்பு), அகிம்சை. இவற்றின் உயிரூட்டம் அன்புதான். அன்பு எண்ணத்திலும் சொல்லிலும் சத்தியம் ஆகிறது, செயலில் தர்மம் ஆகிறது, இவை தரும் மன அமைதிதான் சாந்தி. இந்த நிலையில் எல்லா உயிரும் ஒன்றாகும். இன்பமும் துன்பமும் சமமாகும். மனித குலத்தையோ, மதத்தையோ மொழியையோ வேறுபடுத்தாத பரிபூரண 'சத்சித் ஆனந்த நடுநிலைதான் அகிம்சை ஆகின்றது.

எனவே சாயி மார்க்கம் ஒரு புதிய மதத்தை தோற்றுவிப்பது இல்லை ஏதோ ஒரு மதத்தின் புதிய உருவமும் அல்ல. சாயி வழியின் ஆன்மீக அர்த்தம் பின்வருமாறு:

ஒரே ஒரு குலம், அது புனித குலம்

ஒரே ஒரு மதம், அது அன்பு என்ற மதம்

ஒரே ஒரு மொழி, அது இதயத்தின் மொழி

ஒரே ஒரு கடவுள், அவர் எங்கும் உள்ளார்.

பகவான் சத்திய சாயி பாபாவின் சத் சங்கத்திலும், நிறுவனத்திலும் நாம் சேரும் போதும், சாயி தத்துவத்தை நாம் உணரும் போதும் நாம் நமது மதத்திலிருந்து மாறுவதில்லை. மாறாக ஓர் இந்து மேலும் நல்ல இந்து ஆகின்றான். ஒரு கிறிஸ்தவர் சிறந்த கிறிஸ்தவராக அவ்வண்ணமே புத்த சமயத்தவர் வேறு சமயத்தவர் ஆகியோர் தமது சமயக் கோட்பாடுகளை திறமையாக கடைப்பிடிக்கின்றனர். சாயி போதனைகள் அன்பின் அடிப்படையில் ஆன்மீக மன விருத்தி செய்வதாலேயே, புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்தில் எல்லா மதத்தினரும் ஒன்றாகக் கூடுகின்றனர். பகவான் பேசும் போது கீதை, பைபிள், தம்மபதம் என்று வெவ்வேறு மதத்தினர் தமது நூல்களின் ஓசைகளைக் கேட்கின்றனர்.

பகவான் இன்று கூறுகின்றார் ''உங்கள் வாழ்வுதான் எனது போதனை'' என்று. அத்தகைய வாழ்வைத்தான் பகவான் எதிர்பார்க்கின்றார், இந்த வாழ்வு ஆன்மீகம், கல்வி, சேவை என்பதன் இணைப்பில் மலர்வதாகும். பகவான் ஆன்மீகக் கருத்துக்களை மிகவும் இலகுவான முறையில் தந்திருக்கிறார். அன்பின் அடிப்படையில் சேவை, ஆசைகளைக் கட்டுப்படுத்துதல், எண்ணம்-சொல்-செயல் இவற்றின் ஒற்றுமை, நாமம், ஜெபம், பஜனை, தியானம் மூலம் சாதனை என்று பகவான் ஆன்மீக வாழ்விற்கு வழி காட்டுகின்றார். இந்த வாழ்வில் தன்னலமற்ற சேவை முதன்மையானது. அத்துடன் சேவை ஈகோ என்ற அகங்காரத்தை அழித்து ஆன்மீக ஒளிக்கு இடம் தருகிறது.

பகவானின் கல்விப் புரட்சியை உலகம் போற்றுகிறது. பகவானின் பக்தர்களின் பிள்ளைகளுக்கு பால விகாஸ் கல்வி, எல்லோரின் பிள்ளைகளுக்கு மனித மேம்பாட்டுக் கல்வி என்ற அடிப்படையில் பகவானின் கல்வித் தத்துவம் உலக நாடுகளில் வேரூன்றி விட்டது

இந்தக் கல்விப் புரட்சியில் கல்விமான்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்

**- நந்தி -**

றார், பிள்ளைகளின் இனத்தவர், அயலவர் பங்குபற்றுவதன் மூலம் பகவானின் கருணையைப் பெறுவர்.

பகவான் கூறுவது கல்வியின் நோக்கம் ஒழுக்கம் என்று. 20 ஆம் நூற்றாண்டு விஞ்ஞான அறிவிலும் சாதனையிலும் அதீத முன்னேற்றம் கண்டது. 20 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானி ஐன்ஸ்டீன் கூறுகின்றார்.

''விஞ்ஞானம் இல்லாத சமயம் - நொண்டி
சமயம் இல்லாத விஞ்ஞானம் - குருடு''

20ஆம் நூற்றாண்டில் சமயம் ஆன்மீக நோக்கை இழந்தது ஒழுக்கம் சிதைந்தது. நாகரிகம் அர்த்தம் கெட்டது மனித குலம் மனச்சாட்சி இழந்தது உலகின் அழிவு என்று நொஸ்ரடாமஸ் கூறியதன் அர்த்தம் இது தான். இப்படியான யுக வேளைகளில் தான் அவதாரங்கள் அவதரிக்கின்றன அறிஞர். பகவான் பாபாவின் அவதாரத்தைக் கண்டுகொண்டதில் வியப்பில்லை. எதிர் பார்த்தது நடந்தது

ஆன்மீகக் கல்வி 21 ஆம் நூற்றாண்டின் ஆணிவேர்; எதிர்கால விஞ்ஞானத்தின் கண் மனிதநேயத்தைக் காப்பாற்றுவதற்கு ஒரே கருவி. இந்தக் கருவியின் செயற்பாடு நமது இளைய சமுதாயத்தின் கைகளில உள்ளது. உங்கள் கைகளில் இருக்கின்றது.

(நன்றி:- ஞானசக்கரம்)

# யாழ். ஆசிரியர் கலாசாலைகளை மூடவேண்டாம் எனக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். மாவட்டத்தில் இயங்கும் இரண்டு ஆசிரியர் கலாசாலைகளையும் பயிற்றப்படாத ஆசிரியர்களின் நலன் கருதி மூட வேண்டாம் என யாழ். மாவட்டப் பயிற்றப்படாத ஆசிரியர்கள் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கேட்டுள்ளது.

இந்தச் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளதாவது.

வடக்கு—கிழக்குப் பகுதியில் சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் பயிற்றப்படாத நிலையில் உள்ளனர். இந்த நிலையில் இரண்டாயிரமாம் ஆண்டுடன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை மூடிவிடுவது என அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் மேற்படி பயிற்றப்படாத ஆசிரியர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-க]

**நாளை**

கார்த்திகை 8

புதன்கிழமை

திதி: பிரதமை

முற்பகல்: 11.24 வரை.

நட்சத்திரம்: ரோகிணி

மாலை 6.01 வரை.

விநாயக விரதாரம்பம்

ஜயநேரம்: 4.41 — 6.11

ராகுகாலம்: 12.11—1.41

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஒவ்வொருநாளையும் அன்பில் தொடங்குங்கள். அன்பில் செலவழியுங்கள்— அன்போடு முடியுங்கள். ஒவ்வொரு நாளையும் அன்பால் முழுக்கடியுங்கள். இதுவே பகவானிடம் கொண்டு சேர்க்கும் வழி

— பாபா

## நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படும்

நெல்லியடி, நவ. 23

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நெல்லியடிப் பகுதியில் நாளைபுதன்கிழமை கட்டாக்காலி நாய்கள் நஞ்சு வைத்து அழிக்கப்படவிருக்கின்றன. எனவே இப் பகுதியில் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு நெல்லியடி பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

(ஐ-109)

## வருடாந்த ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், நவ. 23

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், சைவப் புலவர் சங்கத்தின் தலைவர் சைவப் புலவர் இ செல்லத்துரையின் பாராட்டு விழாவும் அடுத்த மாதம் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இதுவரைகாலமும் 'சைவப் புலவர்' பட்டம் பெற்ற அனைவரையும் ஒன்றுசேர்க்கும் வகையில ஒழுங்கு செய்யப் பட்டுள்ள மேற்படி நிகழ்வில் அடுத்த ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் படுவார்கள்.

சைவப் புலவர் சங்கத்தின் தலைவரும், முதுபெரும் சைவப் பேரறிஞருமான சிறுப்பிட்டி — நீர்வேலியூர் சைவப் புலவர் இ செல்லத்துரை இந்த நிகழ்வில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார் என சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

(ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட. - கிழக்கு மாகாணசபையில்

# பெரும் நிதி நெருக்கடி நிலை!

## சம்பளம் தவிர்ந்த கொடுப்பனவுகள் நிறுத்தம்

திருகோணமலை, நவ. 23

வடக்கு—கிழக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை அடுத்து சம்பளம் தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகள் யாவும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

வடக்கு—கிழக்குமாகாணத்துக்குரிய குறைநிரப்புப் பிரேரணை நாடாளுமன்றத்தால் இதுவரை அங்கீகரிக்கப் படாததாலும்—

போதுமான கட்டு நிதி கிடைக்காததாலும்—மாகாண சபையில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பிரதம செயலாளரின் உத்தரவுப்படி மாகாண திறைசேரி சகல மாகாண அமைச்சுக்களுக்கும், அனுப்பியுள்ள பணிப்புரையில், நிதிக்கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுள்ளது.

நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய சம்பளங்களைத் தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகளை நிறுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை — வடக்கு — கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் வரும் வலயக்கல்வி அலுவலகங்கள் இவ்வருடம்முடியும் வரை ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தைத் தவிர வேறு எவ்வகையான கொடுப்பனவுகளையும் மேற்கொள்ள வேண்டாம் என மாகாணக் கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் ஆர். சுகுணதீரன் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

இந்த உத்தரவின் காரணமாக ஆசிரியர்களுக்கான கடன்கள், ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டமை காரணமாக வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவை ஆகியவற்றை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-க-3)

## தலைமைத்துவ பயிற்சிக்கருத்தரங்கு

தென்மராட்சி நவ 23

யாழ். மாவட்ட மகளிர் ஆய்வு அபிவிருத்தி மன்றத்தினால் தென்மராட்சிப் பிரதேச மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு கடந்த வியாழனன்று சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

15 தினங்கள் நடைபெறும் இக் கருத்தரங்குகளில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ் குடாநாட்டில்இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே;

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 20 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு;-

### யாழ்ப்பாணம்

[124248ஏ], [124414ஏ], [124450ஏ], [116136ஏ], [120454ஏ], [122481ஏ], [124565ஏ], [124565பி], [124647ஏ], [124808ஏ], [124808பி], [124955ஏ], [124955பி], [126566ஏ], [126583ஏ], [126590ஏ], [126590பி], [126611ஏ], [126614ஏ], [126614பி], [126633ஏ], [126634ஏ], [126650ஏ], (126650பி), (126650சி), (126669ஏ), (126707ஏ), (126725ஏ), [126777ஏ], [126795ஏ], [126795பி], [126795சி].

### கோப்பாய்

(116791ஏ), [116800ஏ], [121096ஏ], (121096பி), (121102ஏ), (121102பி), (121102சி), (121102டி), (121213ஏ), (122962ஏ), (122962பி), (122969ஏ), (122973ஏ), (122973பி), (122974ஏ), (122974பி), (122975ஏ), (122975பி), (122984ஏ), [123151ஏ], (123151பி), (123970ஏ), (123980ஏ), (123992ஏ), (124139ஏ), (124232ஏ), (122639ஏ), (122639பி), (126649ஏ), (126649பி).

### நல்லூர்

(122909ஏ), (122909பி), (122922ஏ), (122964ஏ), (122970ஏ), (122971ஏ), (122972ஏ), (122980ஏ), (122981ஏ), (122982ஏ), (122982பி), (123010ஏ), (123043ஏ), (123062ஏ), [123062பி], [123062சி], [123062டி], [123064ஏ], [123064பி], [123064சி], [124269ஏ], [124302ஏ], [124303ஏ], [124304ஏ], [124318ஏ], [124322ஏ], [124412ஏ], [124420ஏ], [124425ஏ], [124426ஏ], [124427ஏ], [124432ஏ], [124433ஏ], [124494ஏ], [124494பி].

### தெல்லிப்பழை

[123865ஏ].

### உடுவில்

(121210ஏ), (121210பி), (123868ஏ), (123869ஏ), (123869பி), (123870ஏ), (123871ஏ), (123874ஏ), (123874பி), (123876ஏ), (123893ஏ), (123896ஏ), (123899ஏ), (123901ஏ), (123984ஏ), (123984பி).

## ஆயுள்வேத ஆஸ்பத்திரிகள் புனரமைப்பு

வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட புத்தூர் ஆயுள்வேத வைத்தியசாலை, சிறுப்பிட்டி ஆயுள்வேத வைத்திய சாலை என்பனவற்றின் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு அவை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன.

இவ் வைத்தியசாலையில் கிழமை நாள்களில் மூன்று தினங்கள் பொதுமக்களுக்கு மருத்துவ சேவை வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஐ-4-180]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ 23

யாழ். பல்கலைக்கழக தீவக மாணவர் அபிவிருத்திக்கழகம் ஏற்பாடு செய்துள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கல்விக்கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வேலணை சைவப்பிரகாச வித்தியா சாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கழகத்தினால் கடந்த 20 ஆம் திகதி நடத்தப்பட்ட விஞ்ஞான பாட முன்னோடிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை பரீட்சை வினாப்பத்திரங்களுடன் இந்தக் கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

[ஐ-க]

## பொருள்கள் கையிருப்பில்

யாழ்ப்பாணம், நவ. 23

புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ. கூ. சங்கங்களில் அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு கையிருப்பில் உள்ளதால் பாவனையாளர்கள் எந்தவித தட்டுப்பாடுமின்றிப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சங்கத்தின் தலைவர் வைத்தியகலாநிதி லயன். இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

(ஐ-8-க)

## ஆலயக் கூரை தீக்கிரை

யாழ்ப்பாணம், நவ. 23

மந்திகை கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள மாவடி வைரவர் ஆலயக் கூரை மர்மமான முறையில் தீக்கிரையாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இச் சம்பவம் இடம் பெற்றது.

இவ்வாலயத்தின் கூரை கிடுகினால் வேயப்பட்டது. கடந்த நான்கு நாள்களுக்கு மேலாக இப் பகுதியில் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது. சம்பவ தினம் இரவும் மழை பெய்து கொண்டே இருந்தது.

மழை நீரினால் நன்கு நனைந்து ஈரலிப்பு மிகுந்து காணப்பட்ட இவ்வாலயத்தின் கூரை சனிக்கிழமை காலை பார்த்த போது முற்றாக எரிந்து சாம்பராகிக் கிடக்கக் காணப்பட்டது. இது எவ்வாறு எரிந்தது என்பது மர்மமாகவுள்ளது.

(ஐ-15-173)

## எழுவைதீவுக் கடலில் பிடிபட்ட 8 அடி நீளமான கடற்பன்றி

## கொட்டடி மீன் சந்தையில் விற்பனை

அரியாலை, நவ. 23

யாழ். நகரில்உள்ள கொட்டடி மீன்சந்தையில் கடற்பன்றி ஒன்று 31 ஆயிரம் ரூபாவாக கடந்த சனிக்கிழமை விற்கப்பட்டது.

எழுவைதீவுக் கடலில் மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்தக் கடற்பன்றி எட்டு அடி நீளமும் நான்கு அடி அகலமும் கொண்டதாகும்.

இந்தக் கடற்பன்றி வாகனம் மூலம் எழுவைதீவில் இருந்து எடுத்துவரப்பட்டு கொட்டடி மீன் சந்தையில் விற்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கடற்பன்றியை பார்வையிட்டனர்.

[ஐ-17]

# செய்திக் கொத்து

## வீதி திருத்தக் கோரிக்கை

குருநகர், நவ. 23

சேதமடைந்த நிலையில் உள்ள குருநகர் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதியைச் செப்பனிட நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம். எட்வேட் யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். (க-51)

## சிறுவர் பூங்கா அமைப்பு

நெல்லியடி, நவ. 23

பருத்தித்துறை நகர சபையின் அனுசரணையில் பருத்தித்துறை கடற்கரை வீதியில் சுமார் 3 லட்சம் ரூபா செலவில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தச்சிறுவர்பூங்காவில் பொருத்துவதற்கென ஒரு லட்சம் ரூபா செலவில் புதிய ஒலிபெருக்கி சாதனங்களை நகராட்சி மன்றம் கொள்வனவு செய்துள்ளது. (க-109)

## அபிவிருத்தி உதவியாளர்கள்

குருநகர், நவ. 23

யாழ். கல்வி வலயத்தில் சேவையாற்ற மூன்று பட்டதாரிகள் அபிவிருத்தி உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

திருமதி வாசுகி தயானந்தன் [நல்லூர்] திருமதி நிர்மலா சுரேஸ்குமார் [சாவகச்சேரி], திருமதி புஸ்பமலர் துரைசிங்கம் [கொடிகாமம்] ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உதவியாளர்களாவர். இவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள். (ஐ-51)

## குழாய்க் கிணறு

தென்மராட்சி, நவ. 23

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் எழுதுமட்டுவாழ் தெற்கில் குழாய்க் கிணறு அமைக்கப்படவுள்ளது.

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எழுதுமட்டுவாழ் கிளைக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க கிளைக் கடைக்கு குழாய்க் கிணறு அமைப்பதற்கு கழகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக கிளைக்குழுத் தலைவர் இ. தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

(ஐ-117)

## தென்னைச் செய்கைப் படக்காட்சி

நவாலி, நவ. 23

யாழ். குடாநாட்டில் தென்னைச் செய்கையை ஊக்குவிப்பது தொடர்பான கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் நல்லூர் தென்னைப்பயிர்ச்செய்கை சபையினால் நடத்தப்பட்டது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவை அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சத்தியேந்திரா விரிவுரைகளை நடத்தியதுடன் தென்னை உற்பத்தி, பராமரிப்பு அறுவடை தொடர்பான வீடியோ, படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

(ஐ-100)

## எழுத்தறிவூட்டல் வகுப்பு

குருநகர், நவ. 23

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் அடுத்த ஆண்டு தரம் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ மாணவிகளுக்கான எழுத்தறிவூட்டல் பயிற்சி வகுப்புக்கள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

(க-51)

## வயிற்றோட்ட நோய்

கைதடி, நவ. 23

கைதடி மத்திய மருந்தகத்தில் வயிற்றோட்ட நோய்க்காகத் தினமும் பத்துக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்

நாவற்குழி, கோயிலாக்கண்டி, மறவன்புலவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே வயிற்றோட்டநோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. [க-74]

## மலசலகூடம் அமைப்பு

சண்டிலிப்பாய், நவ. 23

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் (ஜீ.ரி. இசற்) நிதி உதவியுடன் ஆறு மல சல கூடங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.

இதேவேளை—

இம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான திருமதி தவமணிதேவி தனபாலசிங்கம் 50 ஆயிரம் ரூபா செலவில் சிறுவர் பூங்கா ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார்.

[ஐ-135]

## வகுப்பறைக் கொட்டகை சரிந்தது

யாழ்ப்பாணம், நவ. 23

கடும் மழை காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த நாகர் கோயில் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வகுப்பறைக் கொட்டில் ஒன்று சரிந்து வீழ்ந்துள்ளது,

சம்பவ தினம் மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியே பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தமையால் தெய்வாதீனமாக உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

இதனால் வகுப்பறைத் தளபாடங்கள் சேதமடைந்துள்ளன. (ஐ-9-173)

## வீதி திருத்தம்

வடமராட்சி, நவ. 23

யாழ்ப்பாணம் தாளையடி வீதியில் புதுக்காட்டுச் சந்தி தொடக்கம் தாளையடி வீதி வரையான வீதி திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

நீண்ட காலமாகப் பழுதடைந்திருந்த இவ் வீதியில் இ.போ.ச. பஸ் சேவை நடைபெற்று வருவதைத் தொடர்ந்து இவ் வீதி திருத்தப்பட்டு வருகிறது. (ஐ-372)

## தையல் இயந்திரங்கள் கையளிப்பு

நெல்லியடி, நவ. 23

கரணவாய் — கப்புதூ பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட தையற் பயிற்சி நிலையத்திற்கு யாழ். மாவட்ட சர்வோதய நிறுவன செயற்திட்ட நிறைவேற்றுநர் எஸ். வி. சங்கரப்பிள்ளை மூன்று தையல் இயந்திரங்கள் மற்றும் துணிவகைகளைக் கையளித்துள்ளார்.

(க-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ. பி. டி. பி. மற்றும் தொ. காங்கிரஸ்

# மடுச்சம்பவத்தைகண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

மடுத் தேவாலயப் பகுதியில் சனி இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து ஈ. பி. டி. பி. மற்றும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் விடுத்த அறிக்கைகள் வருமாறு:-

ஈ. பி. டி. பி.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த சனிக்கிழமை இரவு (20-11-1999) மன்னார் மடுத் தேவாலயத்துக்கு அண்மையாகவுள்ள இருதய ஆண்டவர் கோயிலில் தஞ்சமடைந்திருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீதான ஷெல் தாக்குதலை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஆலயத்தின் மீதான இத் தாக்குதலில் 38 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 60-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளமை தஞ்சமடைந்திருந்த அப்பாவிகள் மீதான தாக்குதலின் மிலேச்சத்தனத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இத் தாக்குதலில் குழந்தைகளும் கொல்லப்பட்டிருப்பதானது யுத்தம் குறித்த அச்சத்தையும் கோரத்தையும் மேலும் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளதுடன் தொடர்ந்து வரும் யுத்தத்தின் இடர்ப்பாடுகளுக்குள் தமிழ் பேசும் மக்கள் சிக்குண்டு பலியாகி வருவதே நாளாந்த நிகழ்வாக உள்ளது. தங்கள் அரசியல், இராணுவ வெற்றிகளைத் தீர்மானித்துக்கொள்ளும் யுக்தியாகப் பொதுமக்கள மீது தாக்குதல்களை நடத்திவிட்டு யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்பினரும் ஒருவரையொருவர் பழி சுமத்துவதென்பது மாறாகத் தங்கள் பின்னடைவுகளைத் தாங்களே தீர்மானித்துக் கொள்வதாக அமைந்து விடுகின்றது.

நடைபெறுகின்ற இந்த யுத்த நிகழ்வுகளின்போது பொதுமக்கள் கேடயமாகப் பாவிக்கப்படுவது நிறுத்தப்படுவதுடன், இடம்பெயரும் அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பிற்கெனப் பிரகடனப்படுத்தப்படும் யுத்த சூனியப் பிரதேசத்தின் பாதுகாப்பை யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பினரும் உறுதி செய்ய வேண்டும் என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இத் தேவாலயம் மீதான தாக்குதலைப் பொதுமக்களின் புனிதஸ்தலங்களை மாசுபடுத்தும் ஒரு நடவடிக்கையாகவே நாம் கருதுகின்ற அதேவேளை தொடர்ந்தும் இதுபோன்ற தாக்குதல் நடைபெறுவது நிறுத்தப்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் இத்தாக்குதலில் பலியாகியுள்ள பொதுமக்கள் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ பி டி. பி.) யினராகிய நாம் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சனிக்கிழமை இரவு மடு மாதா தேவாலயத்தின் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் மிக மோசமான, மிலேச்சத்தனமான, கோழைகளின் செயல். போர்ச்சூழல் காரணமாக அனைத்தையும் இழந்து தேவாலயத்திலே தஞ்சம் அடைந்துள்ள அப்பாவி மக்களின் மீது நடத்தப்பட்டுள்ள இந்தப் படுகொலைத் தாக்குதல்களை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கின்றது. தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தின் மூலமாகத் தீர்வு காண முயல்பவர்களே இந்த மனிதப் படுகொலைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

கோவில்கள், தேவாலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவது இது முதல்முறையல்ல மீண்டும் மீண்டும் நடத்தப்படுபவை; தற்செயலான நிகழ்வுகளும் அல்ல இவை அனைத்தும் திட்டமிட்ட படுபாதகக்கொலை நடவடிக்கைகளே. தென்னிலங்கையிலே இருக்கக் கூடிய தமிழ்க் கட்சிகள், ஜனநாயக முற்போக்கு கட்சிகள், மனித உரிமை அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுதிரண்டு இந்த நாசகார நடவடிக்கைகளுக்கு தமது திட்டவட்டமான கண்டனத்தை தெரிவிக்க வேண்டும்.

சமாதானத்தைக் கொண்டு வருவோம் என்று ஆட்சிப்பீடமேறிய இன்றைய அரசாங்கம் இப்போது யுத்தத்தை நாடுமுழுக்க பரவலாக்கி உள்ளது. அதிகாரத்தைப் பரவலாக்குவோம் என்ற நிலைமை மாறி யுத்தம் பரவலாக்கப்பட்டுள்ளது வடக்கு—கிழக்கு பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வை ஏற்படுத்துவோம் என்று சிங்கள மக்களுக்கு ஒரு முகத்தையும் சமாதானத்தைக் கொண்டு வருவோம் என்று தமிழ் மக்களுக்கு ஒரு முகத்தையும் காட்டியவர்கள் இன்று இரண்டிலுமே தோற்றுப்போய் விட்டார்கள். இந்தத் தோல்விகளினால் ஏற்பட்டுள்ள விரக்தியின் வடிகாலாகவே அப்பாவிப் பொதுமக்கள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

தென்னிலங்கையில் இருந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளை இந்தச் சூழ்நிலையிலாவது தமது இன்றைய அரசியல் நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இதன்மூலம் இங்குள்ள சமாதான சக்திகளுடனும், மனித உரிமை அமைப்புகளுடனும் இணைந்து இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கையைச் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டுவர வேண்டும். சர்வதேச கண்டனமும் நிர்ப்பந்தமுந்தான் இன்றைய சூழ்நிலையில் அல்லலுறும் அப்பாவி மக்களைக் காப்பாற்றக்கூடியவை. இதை இன்று நாம் செய்யத் தவறுவோமாயின் முழு நாடும் சிவில் யுத்தகளமாக மாறி விடுவதையும் அதன் மூலமாக நாடு பிளவுபடுவதையும் தவிர்க்க முடியாது — என்றுள்ளது. (இ-3)

## பருத்தித்துறையில் நாய்களுக்குத் தடுப்பூசி

நெல்லியடி, நவ. 23

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நெல்லியடி, கரணவாய் பகுதிகளில் இன்று (செவ்வாய்) தொடக்கம், மூன்று தினங்கள் வளர்ப்பு நாய்களுக்குத்தடுப்பூசிகள் ஏற்றப்படவிருக்கின்றன,

நெல்லியடி முருகமூர்த்தி சனசமூக நிலையம், வதிரி கதிர்காம கோயிலடி, கரவெட்டி இராச கிராமம் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் இன்று காலை தொடக்கம் பிற்பகல் வரை தடுப்பூசிகள் நாய்களுக்கு ஏற்றப்படவிருக்கின்றன.

நாளை புதன்கிழமை கரணவாய் பொது சுகாதாரப் பிரிவிலுள்ள அண்ணாசிலையடி சனசமூக நிலையம், மண்டான் சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் —

25 ஆம் திகதி கரணவாய் குருக்கள் பகுதி சனசமூக நிலையம், மணல்பாதி சனசமூக நிலையம், ஆகிய இடங்களிலும் —

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்படுமென்று நெல்லியடி, கரணவாய் பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

[ஐ-109]

## கருத்தரங்கு

வலி.வடக்கு. நவ. 23

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7, தரம் 10 ஆகிய வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் விஞ்ஞான, சமூகக் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கல் கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி ஐந்து நாள்கள் நடைபெறவுள்ளன.

இரண்டாயிரம் ஆண்டில் இவ் வகுப்புகளில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள புதிய கல்விமுறைக் கேற்பவே இப் பயிற்சி வகுப்புகள் இடம்பெறவுள்ளன.

விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும்—

சமூகக் கல்விபாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும்— இராமநாதன் கல்லூரி என்பவற்றிலும் நடைபெறவுள்ளன. (க-86)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், நவ. 23

திருக்கார்த்திகையை முன்னிட்டு நல்லூரில் அமைந்துள்ள அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை விசேஷ பஜனையும் திருமுறை ஓதலும் நடைபெறவுள்ளன.

நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம் பெறும்.

(க-30)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ள திருக்கார்த்திகை உற்சவத்தை முன்னிட்டு பிற்பகல் 2.30 மணி தொடக்கம் அபிஷேகம், விசேட பூசை, மூர்த்திகளின் தூபிகளுக்கு விளக்கேற்றல், சொக்கப்பானைத் தீபம் ஏற்றல், விசேட அலங்காரத்துடன் தண்டிகையில் சுவாமி வெளி வீதியுலாப்பவனி ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

(இ-3)

★ ★ ★

திருக்கார்த்திகைத் திருநாளை முன்னிட்டு இன்று நெடுந்தீவு மத்தி பெருக்கடி சித்திவிநாயகர், கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார், மேற்கு கரமத்தை கந்தசுவாமி, நெமுலினி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயங்களில் விசேட பூஜைகள் இடம்பெறும். (இ-111)

★ ★ ★

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இன்று திருக்கார்த்திகை உற்சவமும், விஷ்ணு ஆலய தீபம், குமாராலய தீபம் ஆகியனவும் நடைபெறவுள்ளன. (இ-86)

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவிஆலயத்தில் இன்று திருக்கார்த்திகைவிழா, பூஜை நடைபெறுவதுடன், குமாராலய தீபமும் நடைபெறவுள்ளது.

(இ-86)

## கஜபாபுரவில் மோதல்!

கொழும்பு, நவ. 23

மணலாறு, கஜபாபுரப் பகுதியில் நேற்று முன்தினம் காலை அரசபடையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

படையினர் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து தேடுதல்களை நடத்தி வருகின்றனர் என்றும்—

அச்சமயமே விடுதலைப் புலிகளுடன் மோதல் ஏற்பட்டது என்றும்—

இந்த மோதலில் இரு படையினர் காயம் அடைந்தனர் என்றும்—

இந்த மோதலில் 15 புலிகள் உயிரிழந்தனர் என்றும்—பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது (இ-3)

## விவசாயிகள் செயல் திறனை அதிகரிக்கப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், நவ. 23

விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் செயல் திறனை அதிகரிக்கும் நோக்கோடு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில்புதிதாகப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ள இப் பயிற்சி நெறியில் வயது வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாற்று மேடைப் பராமரிப்பு, கூட்டெரு தயாரித்தல் வதிவிட வேளாண்மை, சேதனைப் பயிர்ச் செய்கை ஒருங்கிணைந்த விவசாயம், பீடை முகாமைத்துவம், நீரிறைக்கும் இயந்திரம், தெளிகருவி பராமரித்தல் பழமர நாற்றுக்கள் ஒட்டுதல், பதிவைத்தல், போன்ற விடயங்கள் தொடர்பாக இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இப் பயிற்சியில் பங்குபற்றுபவர்களுக்கு ஊக்குவிப்பாக நாளொன்றுக்கு 30 ரூபா வழங்கப்படும். என்றும் -

டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்குமாறும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது,

(ஐ-5)

## நகரில் முடிச்சு மாறிகள்

யாழ்ப்பாணம். நவ 23

யாழ். நகரப்பகுதியில் பிக்பொக்கட் அடிப்பவர்கள் மற்றும் முடிச்சு மாறிகள் நடமாட்டம் அதிகரித்து இருப்பதாக யாழ். பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய பஸ் நிலையப் பகுதியில் இவர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் பொதுமக்களை விழிப்புடனிருக்குமாறும் பொலீஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேபோன்று சைக்கிள் திருட்டுகளும் அதிகரித்துக் காணப்படுவதால் நகரப் பகுதிகளுக்கு வருவோர் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் அவற்றைப் பூட்டி வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

(ஐ-5)

## சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 23

யூனியன் கல்லூரி வர்த்தக மாணவர்களினால் வெளியிடப்படவுள்ள "வணிகதீபம் - 4" சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க. தேவராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலாமகேந்திரன் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

[க-8-9]

## ஐ. நா. திட்டக் கடன் உதவி

யாழ்ப்பாணம், நவ. 23

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட நிறுவனம் நுண் கருத்திட்டம் மூலம் புங்குடுதீவு மற்றும் நயினாதீவு ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கி ஊடாக சுயதொழில் முயற்சிக் கடனாக 10 லட்சம் ரூபா பணத்தொகையை வழங்க முன்வந்துள்ளது.

கடந்த வாரம் நயினாதீவு, புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி லயன்ஸ். க. இராஜரட்ணம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபா ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அதிகாரியினால் வழங்கப்பட்டது.

(ஐ-8)

## பொலீஸாருக்கு பணிப்பு

நெல்லியடி, நவ. 23

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படும் சமயம் அவ்வப்பகுதி பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும், நீதிமன்றில் பிரசன்னமாகி நெறிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

[ஐ-117]

## குளப்புனரமைப்பு பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 23

பட்டினிக் கெதிரான நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட மல்லாகம் நீலியம் பனைக்குளத்தின் சம்பிரதாய பூர்வமான கையளிப்பு வைபவம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது

தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப திலநாயகம் போல் மற்றும் விவசாயத் திணைக்கள பிரதி நிதிகள், கமநல சேவை உத்தியோகத்தர்கள், சம்மேளன உறுப்பினர்கள் பட்டினிக் கெதிரான நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் கண்ணிவெடி விழிப்புணர்வு பற்றிய கருத்துரையும் சிறுகுளங்கள் பராமரிப்புப் பற்றிய விடயங்களும் விவசாயிகளுக்கும், சம்மேளன உறுப்பினர்களுக்கும் பட்டினிக் கெதிரான நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

(ஐ-10)

---

கூட்டுறவுப்...

(இரண்டாம் பக்கத் தொடர்)

இக்கல்லூரி யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது.

தற்போது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதியின் கீழ் இக்கல்லூரி புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன.

ஜனவரி மாதம் முதல் இக்கல்லூரி மீண்டும் அங்கு இயங்கவுள்ளதாகத் தெரிய வந்தது. [ஐ-86]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. 4 விக்கெட்டுக்களால் வெற்றி

மெல்பேர்ன், நவ. 23

ஆஸ்திரேலிய — பாகிஸ்தான் அணிகளுக்கிடையே ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா 4 விக்கெட்டுக்களால் வென்றது.

முன்னதாக பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 392 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் இன்ஸமாம் சதம் அடித்தார். அன்வர், இஜாஸ் ஆகியோர் அரைச்சதம் அடித்தளர்.

பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 369 ஓட்டங்களை இரண்டாவது இன்னிங்ஸில் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாடத் தொடங்கியது.

ஆறு விக்கெட்டுக் களை மாத்திரம் இழந்து அது வெற்றிக்கான இலக்கை எட்டிக்கொண்டது. இதில் ஆஸ்திரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் அடம்க்ளிக்றிஸ்ட் ஆட்டமிழக்காது 149 ஓட்டங்களைப் பெற்று தனது முதலாவது டெஸ்ட் சதத்தை நிறைவு செய்துள்ளார். அவருடன் சேர்ந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஜஸ்டின் லாங்கர் 127 ஓட்டங்களை அடித்தார்.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றதன்மூலம் நடைபெற்ற இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் ஆஸ்திரேலிய அணி 2-0 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.

ஒரு டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் பெரியதொரு இலக்கான 369 ஓட்டங்களுக்காக துடுப்பெடுத்தாடி வெற்றி பெற்றதன் மூலம் 1948 ஆம் ஆண்டு டோர்ண் பிராட் மனின் தலைமையின் கீழ் நிகழ்த்தப்பட்ட சாதனையை முறியடித்தார் அணித் தலைவர் ஸ்ரிவ்வோ.

நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய — பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான இந்த டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும். (இ-4-8)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியால் நடத்தப்படும் பாடசாலைகள், கழகங்களுக்கு இடையேயான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 3.15 மணிக்கு — யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் பற்றிசஸ் கல்லூரி.

★ மாலை 4 30 மணிக்கு— சென்றலைட்ஸ் வி. க. எதிர் பற்றீசியன்ஸ் வி. க. கோல்ட்ஸ் அணி. (இ-4)

## மடு தேவாலய அகதிகளுக்கு உலர் உணவு

வவுனியா, நவ. 23

மடு தேவாலயத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு இரு மாத காலத்துக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் என். சே ஒபடகே மன்னார் அரச அதிபருக்கு உத்தரவு வழங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியா வந்த ஒபடகேயுடன் மன்னார் அரச அதிபர் பேசியதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு இருவார காலத்துக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குமாறு ஒபடகே வவுனியா அரச அதிபருக்கும் உத்தரவிட்டுள்ளார். [இ-3]

## இலங்கை—ஸிம்பாப்வே ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவு

இலங்கை — ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையே ஸிம்பாப்வேயின் புளாவயோவில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் ஆட்டம் மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 142 ஓட்டங்கள் முன்னணியில் இருக்கத் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஸிம்பாப்வே அணி 136 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டம் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

ஆட்டத்தின் இறுதிநாளான நேற்றும் தொடர்ந்து பெய்த மழைகாரணமாக முதலாவது டெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இலங்கை அணியின் முதலாவது இன்னிங்ஸில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மார்வத் அத்தப்பத்து அந்த இன்னின்ஸ் முழுவதும் களத்தில் நின்று சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 216 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஹராரே விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். (இ-4-8)

## கண்ணீர் அஞ்சலி

பாலம்பிட்டி மன்னாரைச் சேர்ந்த
எமது சகோதரன்

**வா. பாலச்சந்திரன்**

(பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
அவர்களின்

அன்புத் தந்தை, தங்கை மற்றும் உறவினர்கள்

கடந்த 20-11-99 அன்று மடுவில் நடைபெற்ற அனர்த்தத்தில் அகால மரணமடைந்ததையிட்டு எமது கிறிஸ்தவ மாணவர் ஐக்கியம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

நொருங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குச் சமீபமாகவும் நருங்குண்ட ஆவியுள்ளவர்களைத் தேற்றுகின்றவருமான கர்த்தாவே! இந்தப் பெரியதான இழப்பினால் துயரமுற்றுள்ள எமது சகோதரனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நீரே சமீபமாக இருந்து தேற்றவேண்டுமென எமது ஆறுதலின் தேவனாகிய இயேசுக் கிறிஸ்துவின் பாதத்தில் வந்து நிற்கும்,

கிறிஸ்தவ மாணவர் ஐக்கிய
சகோதர, சகோதரிகள்.
(71196) யாழ். பல்கலைக்கழகம்.

## வீணான...

(முதலாம் பக்கத் தொடர்)

மாறு:-

★ வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு கடந்த 20 நாள்களுக்கு மேல் உணவு அனுப்பப்படவில்லை. அவர்களுக்கு உடன் உணவு அனுப்பவேண்டும்.

★ வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

★ வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்படுவது தற்போதுள்ள பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கலாம். எனவே அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும். [இ-3]

## இறந்தோரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ க.செல்வராசா (வயது-33)

★ வாரித்தம்பி பரதமி வயது-18)

★ நவரட்ணம் ராஜேஸ்வரி [வயது 55]

★ குலவீரசிங்கம் [வயது22]

★ தம்பிப்பிள்ளை தகவீரசிங்கம் [வயது 45]

★ கனகரத்தினம் வாரித்தம்பி [வயது 54]

★ குகானந்தன் சுகந்தி [வயது 24]

★ திசைவீரசிங்கம் அம்பிகாவதி [வயது 40]

★ சந்திரசேகரம் பூமணி [வயது 62]

★ க. தேவராணி [வயது 46]

★ முனியாண்டி உதயசீலன் [வயது 29]

★ செல்வராசா நிஷந்தன் [வயது [13]

★ குணவீரசிங்கம் சுகன்யா [வயது 13]

★ திசைவீரசிங்கம் மைதிலி [வயது 2]

★ ஏகாம்பரம் தனேஸ்வரி [வயது 65]

★ சந்திரமோகன் சசிதரன் [வயது 9]

★ சந்திரமோகன் சுதாகரன் [வயது 9] (இவர்கள் இருவரும் இரட்டைப்பிள்ளைகள்)

★ சந்திரமோகன் லக்ஷாயினி [வயது 11]

★ சந்திரமோகன் கவிதா [வயது 7] இவர்கள் இரட்டைப்பிள்ளைகளின் சகோதரிகள் இந்தக் குடும்பத்தில் நான்கு பிள்ளைகளும் உயிரிழந்து விட்டனர். தாய் உயிர் தப்பியுள்ளார். தந்தை வவுனியா-கற்குழியில் வசித்துவருகின்றார்.)

★ சூரியகுமார் சுகன்யா வயது 13]

★ பாஸ்கரன் நந்தினி [வயது 5]

★ செல்வராஜ் நிராஜ் [வயது 9]

[இவர்களுடன் 4 குழந்தைகளின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.)

வவுனியா ஆஸ்பத்திரியில் உயிரிழந்து அடையாளம் காணப்பட்ட 7 பேரின் விவரம் வருமாறு;

★ சரோஜராணி தேவராஜா

★ கிறிஸ்ரிகவாஸ்கர்

★ சேகராசா [வயது 17]

∗ S. சதீஸ்வரன் [வயது15)

★ அன்ரனி செல்வம் [வயது 5]

★ அந்தோனிமுத்து [illegible] [வயது [illegible]]

[illegible] [வயது 46] [இ-3-7]

# பொலீஸ் நிலைய அதிகாரியை சுட்டுக் கொன்ற கான்ஸ்டபிள்

## கிரனேட் வெடிக்க வைத்து தானும் பலி!

அம்பாறை, நவ. 23

விடுமுறை வழங்க மறுத்த பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச்சுட்டுக் கொலை செய்த கான்ஸ்டபிள் ஒருவர் கிரனேட் ஒன்றை வெடிக்க வைத்துத்தானும் தற்கொலை செய்து கொண்டார்.

அம்பாறை சென்ரல் காம்ப் பொலீஸ் நிலையத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது

மேற்படி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியான சப். இன்ஸ்பெக்டர் பண்டாரநாயக்காவிடம் கான்ஸ்டபிளான ஹேரத் என்பவர் விடுமுறை தருமாறு கோரினார் என்றும்—

விடுமுறை வழங்க மறுத்ததால் இருவருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது என்றும்—

அதன் பின்னர் பண்டார நாயக்காவை சுட்டுக்கொலை செய்த அந்த நபர் கிரனேட் ஒன்றை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்டார் என்றும்—கூறப்பட்டது

இருவரது சடலங்களும் அம்பாறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன. (இ-3-14)

# வேப்பங்குளம் முகாம் அகதிகள் இடமாற்றுமாறு கோரிக்கை

வவுனியா, நவ. 23

வவுனியா வேப்பங்குளம் அகதி முகாமில் தங்கியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தம்மை வேறுஇடத்துக்கு மாற்றுமாறு அவசர கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உட்பட எட்டு பொது அமைப்புகளிடமே அவர்கள் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

வேப்பங்குளம் அகதி முகாமுக்கு அருகில்இராணுவமுகாம் அமைந்துள்ளது என்றும்—

அங்கு மோதல் இடம்பெற்றால் தாம் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதால் வேறு இடத்துக்கு தம்மை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்— அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மடு அகதி முகாம் அகதிகளுக்கு ஏற்பட்ட கொடூரம் தமக்கும் ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (இ-3)

## திருத்தம்

நேற்றைய ''உதயன்'' 4 ஆம் பக்கத்தில் வெளியான திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திருமதி இரஞ்சிதமகேஸ்வரன் (இரஞ்சிதம்) பூசணி அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி விளம்பரத்தில்—

அவரது பெயர் திருமதி இரஞ்சிதபூசணி மகேஸ்வரி எனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.

## ரூ. 2 ஆயிரம் உதவி

மடுத்தேவாலயத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த 31 பேரின் இறுதிக் கிரியைகளுக்காக தலா 2 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டது.

மன்னார் செயலக அதிகாரிகள் மடுவுக்குச்சென்று அவர்களது உறவினர்களிடம் இந்த நிவாரணக் கொடுப்பனவை வழங்கினர். [இ-3]

## அருகருகே...

(முதலாம் பக்கத் தொடர்)

மடுத்தேவாலய வளவில் உள்ள சேமக்காலையில் அருகருகே தோண்டப்பட்ட குழிகளில் அடக்கம் செய்யப்பட்டன.

அவர்களின் உறவினர்கள் ஒப்பாரி வைத்து அலற இடம்பெற்ற இந்த இறுதிக் கிரியைகள் சோகமயமாகக் காட்சியளித்தன.

அதேநேரம் — வவுனியா ஆஸ்பத்திரியில் உயிரிழந்த 6 பேரின் சடலங்கள் இன்று மடுவுக்கு எடுத்து வரப்படவிருக்கின்றன. (இ-3-7)

## மடுச்...

(முதலாம் பக்கத் தொடர்)

யப்பட்டமைக்கு எமது அமைப்பே பொறுப்பு என இலங்கை இராணுவத்தினர் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுக்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாங்கள் திட்டவட்டமாக மறுக்கின்றோம்.

இலங்கை இராணுவமே திடீரென மடுத் தேவாலயச் சுற்று வட்டாரத்திலே ஆட்லறித் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருந்ததுடன் அப்பாவிப் பொதுமக்கள் மீதான படுகொலைகளுக்கும் வித்திட்டது.

சனிக்கிழமை மலையில் தேவாலய வளவினுள் சடுதியாகப் பிரவேசித்த இராணுவ கொமாண்டோ பிரிவொன்று அங்கிருந்த ஆயிரக்கணக்கான அகதிகளை மனிதக் கேடயங்களாக வைத்திருந்தது.

கடந்த வாரத்தில் புலிகள் தேவாலயத்தை விடுவித்திருந்ததுடன் தேவாலய நிர்வாகத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி திருத்தலத்தின் புனிதத்தன்மைக்கு மதிப்பளிக்கும் வகையில் யுத்த சூனியமாக்கி விலகி இருந்தனர் — என்றுள்ளது. (இ-க-3)

## புலிகளே...

(முதலாம் பக்கத் தொடர்)

பகுதி கடந்த சனிக்கிழமை நண்பகலில் படையினரின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததாகவும்—

பெரும் எண்ணிக்கையான அகதிகள் மடுத் தேவாலயப் பகுதியில் தங்கி இருந்த சமயம் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும்—மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த நான்கு மாணவர்களும் கல்லூரியில் இருந்து நீக்கப்பட்டமை சரியெனவும் —

கல்லூரியில் இருந்து தம்மை நீக்கியது தவறு எனத் தெரிவித்து இந்த நான்கு மாணவர்களும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு செல்லுபடியற்றது எனவும் நீதிபதி வி. சண்முகம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

புதிதாகக் கல்லூரியில் சேரும் மாணவர்களைப் பழைய மாணவர்கள் சிலர் அநாகரிகமாகக் கிண்டல் செய்கின்றனர். இதனால் புதிய மாணவர்கள் உளரீதியான துன்பத்துக்கு உள்ளாகின்றனர். அதேவேளை பகிடிவதையின் கொடுமையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சிலர் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன எனவும் நீதிபதி தெரிவித்தார். (இ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23. 11. 1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org